பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 14 செவ்வாய்க்கிழமை (26.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 92

# மஹிந்த - ரணில் இன்று மாலை

# அலரிமாளிகையில் முக்கிய பேச்சு



## இறுதித் தீர்வு யோசனை, சர்வகட்சிக் குழு குறித்து ஆராய்வர்



கொழும்பு, பெப்ரவரி 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்று மாலை அலரி மாளிகையில் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவர்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு யோசனையைத் தயாரித்தல், சர்வகட்சிப் பிரதிநிதிகளின் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குகொண்டு ஒத்துழைப்பு வழங்குதல் ஆகியன குறித்தே இரு தலைவர்களும் பேசுவர் என்று நம்பத்தகுந்த விடயமறிந்த வட்டாரங்கள் நேற்றிரவு ஊர்ஜிதம் செய்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, திஸ்ஸ விதாரண, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோரும்-

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனநாயக்கா, சட்ட ஆலோசகர் கே.என்.சொக்ஸி ஆகியோரும் இன்றைய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகளின் பொருள்களுக்கு இனிக் கட்டணம் அறவிடப்படும்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். - திருமலை கப்பல் பயணிகள் இனிமேல் 25 கிலோவுக்கும் கூடுதலான பொருள்களை தங்களுடன் எடுத்துச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேலதிக ஒவ்வொரு 25 கிலோகிராமுக்கும் 3 ஆயிரத்து 162 ரூபா 50 சதம் செலுத்த வேண்டும் என்று கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதுவரை கப்பல் பயணி ஒருவர் ஆகக் குறைந்தது 25 கிலோ பொருள்களை கட்டணம் இன்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பெரும்பாலான பயணிகள் மட்டுப்படுத்தப்பட்ட எடைக்கு அதிகமாகப் பொருள்களை எடுத்துச் செல்வது வழக்கம்.

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் கப்பலில் பயணஞ்செய்ய ஒரு வழிக் கட்டணம் 3 ஆயிரத்து 162 ரூபா 50 சதம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அநுராதபுர விமானத்தளத் தாக்குதலுக்கு அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தினரா?

### பரிசோதிக்க அமெரிக்க விசேட நிபுணர் குழு வருகை

கொழும்பு, பெப். 26

அநுராதபுரம் விமானப்படைத்தளத்தின் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் அதிநவீன ஆயுதங்களைப் பயன்படுத்தினரா?

இது குறித்துப் பரிசோதித்துக் கண்டறிவதற்காக ஏழுபேர் கொண்ட அமெரிக்க நிபுணர்கள் குழு ஒன்று இங்கு வந்துள்ளது.

விமானப் படைத்தளத்தின் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு புலிகள் இலங்கை இராணுவத்தினரால் பயன்படுத்தப்படாத அதிநவீனரக ஆயுதங்களை பயன்படுத்தியதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம். அதனையடுத்தே அந்த ஆயுதங்களை பரிசோதிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து விசேட நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் இறுக்கமான உறவைப் பேண பரஸ்பரம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 26


எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கையும் இறுக்கமான தொடர்புகளைப் பேணவேண்டியதன் அவசியம் குறித்து ஐ.நா. சபையின் செயலாளரின் விசேட பிரதிநிதி அங்கொலா கனே அம்மையாரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பரஸ்பரம் வலியுறுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியான அங்கொலா கனே அம்மையார் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக சில குழுக்கள் தவறான படத்தையே உலகத்துக்குக் காட்ட முனைந்துள்ளன என்று ஜனாதிபதி அவரிடம் தெரிவித்ததாக அரச சமாதானச் செயலகம் அறிவித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்று மாலை நடந்த இச் சந்திப்பின்போது, செயலாளர் நாயகம் பான் கீ மூனின் விசேட செய்தியை கனே அம்மையார் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐ.நா. விசேட பிரதிநிதியுடன் பேச்சு நடத்தியபோது...

## யாழ். கல்வி வலயத்தின் புதிய பணிப்பாளர் திருமதி. வேதநாயகம்

யாழ்ப்பாணம், பெப். 26

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றிவந்த வே.தி.செல்வரத்தினம் தொடர்ந்து மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றுவார்.

திருமதி. வேதநாயகம், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து வலயக்கல்விப் பணிப்பாளராக அங்கு பிரதிக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்) பணியாற்றிய கு.பிரேமகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பேற்ற பின்னர் வலயக் கல்வி நிர்வாக மட்டத்தில் பல மாற்றங்கள் இடம்பெறவிருப்பதாகக் கூறப்பட்டது. (அ-1-207-11)

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை!

## இந்திய ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

புதுடில்லி, பெப்ரவரி 26

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லையென இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து,இந்திய அரசின் கொள்கையை விளக்கி உரையாற்றுகையில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் துரதிஷ்டவசமாக வன்முறைகள் அதிகரித்துள்ளன எனத் தனது உரையில் குறிப்பிட்டுள்ள இந்திய ஜனாதிபதி, இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லையென்பது குறித்து புதுடில்லி உறுதியாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை ஐக்கிய இலங்கையின் வரையறைக்குள் பேச்சுகள் மூலமாகக் காணவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பிராந்தியத்திலும் சர்வதேச ரீதியிலும் சமாதான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் ஊக்குவிப்பதே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா தனது அயல் நாடுகளுடன் சினேகித பூர்வமான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சார்க் அமைப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.கவில் நானா? மறுக்கிறார் தயாநிதி

சென்னை, பெப்.26

'அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைச் சந்திக்க, நான் திட்டமிட்டிருந்ததாகவும், அச்சந்திப்பின் பின்னர் அ.தி.மு.கவில் நான் இணையப்போவதாகவும் கூறப்படுவது வெறும் வதந்திதான்' என்று மத்திய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் மறுத்துள்ளார்.

சென்னையில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் 60ஆவது பிறந்தநாளை ஒட்டி அவரைத் தயாநிதி மாறன் சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்கவிருந்ததாகவும், அதையடுத்து அ.தி.மு.க.வில் சேர இருப்பதாகவும் சனிக்கிழமை தகவல்கள் வெளியாகியிருந்தன

ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அவர் ஜெயலலிதாவைச் சந்திப்பார் என்றும் பரவலாகச் சொல்லப்பட்டது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் மாறன் குடும்பத்தினரின் நாளேடுகளில் ஜெயலலிதாவின் பிறந்த நாள் குறித்த விளம்பரங்கள் பல வெளியாகின. அதிலும் அ.தி.மு.க. மூத்த தலைவரும் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான ஓ.பன்னீர்செல்வம் பெயரில் ஜெயலலிதா பிறந்தநாள் வாழ்த்து விளம்பரம் முதல் பக்கத்தில் வெளியானது.

ஆனால், இவ்வாறு விளம்பரங்கள் வெளியிடப்படுவது வெறும் வியாபாரம்தான் என்று மாறன் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

''விளம்பரங்களை யாருக்குத் தருவது என்று அவர்கள் முடிவெடுத்தால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று தயாநிதி மாறன் கூறினார். (சி)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா முத்தம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முத்தம்மா அவர்கள் நேற்று (25.02.2008) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், நாகராசா (தாரணி வெல்டிங் சென்ரர், வடலியடைப்பு), சற்குணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், பரலோகராணி, சபாநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும், தாரணி, கௌதமன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2008) மு.ப 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந.நடராசா (மகன்)
(தாரணி வெல்டிங் சென்ரர், வடலியடைப்பு)

*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு* (71448)

## திருமதி செல்லத்துரை சாரதாம்பாள்



வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சாரதாம்பாள் நேற்று (25.02.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்துப்பத்தர் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற சிதம்பரநாதன், சிவபாலன் (உடுப்பிட்டி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஜெயக்குமாரி, விஜயகுமாரி(பேபி), இராசகுமார் (மலேஷியா), வசந்தகுமாரி (மான்குட்டி), விஸ்வகுமார் (பாபு) ஆகியோரின் அன்புத் தாயும் கமலநாதன், செல்வராசா, உதயலக்சுமி, கிரிசா ஆகியோரின் அன்பு மாமியும் கிசோ, ருகேஷ், கஜேந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.விஸ்வகுமார் (மகன் - பாபு)
கதிரவன் ஜெம்ஸ் சென்ரர் ஊழியர்

*936, K.K.S. றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.* (71454)

## பொன்னம்பலம் பத்மராசா (சின்னண்ணை)



கோண்டாவில், நெட்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பத்மராசா நேற்று (25.02.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும், இரத்தினம் - பூமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகேஸ்வரி
(மனைவி)

*நெட்டிலிப்பாய், கோண்டாவில்.* (71456)

## திருமதி தங்கராசா அன்னலட்சுமி

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா அன்னலட்சுமி நேற்று(25.02.2008)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் தங்கராசா (உரைஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ப.இராசேஸ்வரி, திருமதி பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், தி.பரமசிவம் (ஆயுள்வேத மருந்தகம், வழக்கம்பரை), மு.துரைராசா (தபாலகம், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியும், செல்வி பிரியதர்சினி (பொதுச் சுகாதார மருத்துவ மாது), செல்வன் ப.குகப்பிரியன், செல்வன் ப.தவப்பிரியன் (வட்டு இந்துக் கல்லூரி A/L மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2008) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பண்ணாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(A)

## வி.ரி.வி.தெய்வநாயகம் காலமானார்

கொழும்பு,பெப்.26

பிரபல தொழில் அதிபரும் சமூக மற்றும் சமய சேவையாளருமான வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை கொழும்பில் நேற்று காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 95 ஆகும்.

கடந்த மூன்று நாள்களாக சுகவீன முற்றிருந்த அவர் நேற்று மாலை 5.30 மணியளவில் உயிர் நீத்தார். வி.ரி.வி.தெய்வநாயகப் பிள்ளை, கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் ஆலய அறங்காவலரும் ஆவார்.

அவரது இறுதிச் சடங்குகள் நாளை புதன் கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளன. (அ-2)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று விசேட உரை

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் விசேட உரை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு பல்கலைக்கழக பௌதீகத்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

''இலங்கையின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால சக்தித் தேவையும் வழங்கல்களும்'' என்னும் தலைப்பில் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியல்துறை விரிவுரையாளர் கலாநிதி கப்பில பெரேரா உரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவினர் கேட்டுள்ளனர். (1)

## முன்பள்ளிகளுக்கு நாளை முதல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் முன் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான கொடுப்பனவு நாளை முதல் வழங்கப்பட விருக்கின்றது.

யாழ்.கல்வி வலயத்தில் நாளை மு.ப. 10 மணிக்கு வலய அலுவலகத்தில் வைத்தும்-

வலிகாமம் வலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் கல்வி நிலையத்தில் வைத்தும்-

வடமராட்சிக் கல்வி வலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நெல்லியடி ம.வி. ஆசிரியர் கல்வி நிலையத்தில் வைத்தும்- கொடுப்பனவு வழங்கப் படும் என்று முன்பள்ளி பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார். (1)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.26

நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார்.(1-207)

* * *

யாழ்ப்பாணம், பெப்.26

சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு மகாதேவப் பிள்ளையார் கோயில் வீதியில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி.ச.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய், [illegible] தேவைக்கால ஆலோசகர் திருமதி கோசலை குகபாலசிங்கம் கலந்து கொள்வார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு டீசல் கடத்த முயன்றவர் கைது

இராமேஸ்வரம், பெப்.26

இராமேஸ்வரம் தீவுப் பகுதியான பாம்பனில் இலங்கைக்கு டீசல் கடத்த முயன்றவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதி உள்ளூர் முகவர்கள் மூலம் பீடி பொதிக் கட்டுகள், மருந்துப் பொருட்கள் உள்ளிட் டவற்றை இலங்கைக்குக் கடத்த முயன்றபோது பொலிஸார் அவற்றைப் பறிமுதல் செய்து 7 பேரை ஏற்கனவே கைது செய்தனர்.

முந்தல்முனை கடற்கரைப் பகுதியில் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மெல்லர் (வயது - 30) 50 லீற்றர் டீசலை இலங்கைக்குக் கடத்த முயன்ற போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர் மதுரைசிறையில் அடைக்கப்பட்டார்.

## சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்

பொதுக் கூட்ட அழைப்பு - 2008

மேற்படி சங்கத்தின் 2008ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நெறியாளர் தெரிவும் 28.02.2008 மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(71446) செயலாளர்

## கண்ணீர்க் காணிக்கை



அமரர்
முருகேசு செல்லத்துரை

எமது நிறுவன ஆசிரியராகிய திரு. செ.தேவரஞ்சன் அவர்களின் பாசமிகு தந்தையாரான அமரர் முருகேசு செல்லத்துரை அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மது கல்வி நிறுவனம், டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.*

அதிபர்
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(71457)

## இதய அஞ்சலி



செல்வி யோகாம்பிகை
செல்லையாப்பிள்ளை (அம்பியக்கா)
[சங்கீதபூஷணம், அண்ணாமலை]
[இளைப்பாறிய இசையாசிரியர், யா/இராமநாதன் கல்லூரி]

எமது கல்லூரியின் நீண்டகால பழைய மாணவியும் பெருமைமிகு ஆசிரியரும் தேசிய மட்டத்தில் பல தடவை கல்லூரி கலை நிகழ்ச்சிகளை வெற்றியீட்ட வைத்தவருமான செல்வி யோகாம்பிகை செல்லையாப்பிள்ளை அவர்கள் காலமான செய்தி அறிந்து வேதனை அடைகின்றோம். அவரின் ஆத்மாசாந்தி யடைய கந்தவனக்கடவை முருகனைப் பிரார்த்தித்து எமதுஇதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
*யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.* (71450)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக ஊழியர்
திரு. செ. தேவரஞ்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

**முருகேசு செல்லத்துரை**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம்.
அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், கல்விசாரா ஆளணியினர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி/551593)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்
திரு. முருகேசு இராசரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்

**முருகேசு செல்லம்மா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
ஊர்காவற்றுறை பிரதேசசபை நலன்புரிச் சங்கம்,
ஊர்காவற்றுறை.

(சி/551594)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ச.தேவகுமாரன்
அவர்களின் மாமியாரான

**திருமதி சிவகுரு தங்கப்பிள்ளை**

காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர்,ஆசிரியர்கள் ,கல்வி சாரா ஊழியர்கள்
*யா/இராமநாதன் கல்லூரி ,சுன்னாகம்* (71449)





புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்.சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் சைவபரிபாலன சபை உப செயலாளர் மாணிக்கவாசகர், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுகிறார். அருகில் சபைச் செயலாளர் இரா.செல்வவடிவேல் நிற்கிறார். பண்ணிசைப் போட்டி மேற்பிரிவில் முதலிடம் பெற்ற யூனியன் கல்லூரி மாணவன் சு.தசாங்கனின் பண்ணிசை இடம்பெறுவதையும் கலந்துகொண்டவர்களையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

## சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் 'பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ந.வினோதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலைப்பீட பீடாதிபதி சோ.கிருஷ்ணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி தி.வேல்நம்பி, கலைப்பீட மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளர் பேராசிரியர் கா.குகபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (203)

# மின்சாரம் பெறுவதற்கான வேலைகளைத் துரிதப்படுத்துமாறு புங்குடுதீவு மக்களுக்கு குழந்தை இல்லத்தினர் கோரிக்கை

## தாமதித்தால் சேவையை இழக்க நேரிடலாம்

நல்லூர்,பெப்.26

புங்குடுதீவுப் பகுதிக்கு மின் இணைப்புப் பெறுவதற்கான மின்பிறப்பாக்கி எடுத்துவரப்பட்டுள்ளதால் தேவையான மக்கள் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறுவதற்கான செயற்பாடுகளைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும்.

புங்குடுதீவு அந்தோனியார் தெய்வக் குழந்தை இல்லம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புங்குடுதீவு பகுதிக்கு மின் இணைப்பு வழங்கக் கோரி கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் தெய்வக் குழந்தைகள் இல்லம் யாழ்.அரச அதிபர், மின் அத்தியட்சகர், வேலணை பிரதேச செயலர் ஆகியோருடன் தொடர்புகொண்டதை அடுத்து அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக புங்குடுதீவுக்குப் புதிய மின்பிறப்பாக்கி எடுத்துவரப்பட்டுள்ளது.

எனினும் புங்குடுதீவுப் பகுதிக்கான மின்விநியோகம் இன்னமும் இடம்பெறவில்லை.

மின்சாரம் வேண்டும் என அதிகாரிகளை வலியுறுத்தி வந்த மக்கள் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறுவதில் ஆர்வமற்றவர்களாக இருப்பதே இதுவரை மின்விநியோகம் ஆரம்பிக்கப்படாதிருப்பதற்கான காரணம் எனத் தெரிகின்றது.

மின்சாரம் தேவையென வற்புறுத்தியவர்கள் தற்சமயம் மின்பிறப்பாக்கி வந்து சேர்ந்த பின்னரும் தமது வீடுகளுக்கு மின் இணைப்பைப் பெற முன்வராது இருக்கின்றனர்.

இதன்காரணமாகப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட ஒரு முக்கிய தேவையை இழக்கவேண்டி ஏற்படலாம்.

எனவே பொதுமக்கள் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறுவதற்கான செயற்பாடுகளைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (203-111)

## வெளியூர்களில் இருந்து எடுத்துவரப்படும் தபால்களில்

# உரிய கட்டண முத்திரைகள் ஒட்டப்படாதவற்றுக்கு கட்டணமும் தண்டமும் அறவிடப்படுகின்றன

கட்டைவேலி,பெப்.26

வெளியூர்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும் தபால்களில் சரியான கட்டண முத்திரைகள் ஒட்டப்படாதவற்றுக்கு உரிய கட்டணமும், தண்டனைக்கான மேலதிக கட்டணமும் தபால் நிலையங்களால் அறவிடப்பட்டு வருகின்றன.

தபால்களுக்கான புதிய கட்டணமுறை தபால் திணைக்களத்தால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இக்கட்டண விவரம் குறித்து பொதுமக்களுக்கு போதிய தெளிவின்மையால் அவர்கள் தமக்கு நீண்டகாலம் பரீட்சயமான கட்டண முறைப்படி முத்திரைகளை ஒட்டி தபால்களை அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் தபால்கள் தரம் பிரிக்கப்படும்போது அவை கண்டுபிடிக்கப்பட்டு உரியவர்களிடம் இருந்து அதற்கான பணம் அறவிடப்பட்ட பின்னரே தபால்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

உரியவர்கள் மேலதிக தண்டனைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அக்கடிதங்கள் அனுப்பியவர்களின் முகவரிக்குத் திருப்பி அனுப்பப்படுவதாகவும் கூறப்படுகின்றது. அனுப்புபவரின் முகவரி இல்லாத கடிதங்கள் தபால் நிலையத்துக்கு அனுப்பப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. (203-275)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் ஞாயிறுமுதல் மீண்டும் குமுதினிப் படகு

நல்லூர்,பெப்.26

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக திருத்தவேலைகள் செய்யப்பட்டு வந்த குமுதினிப்படகு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் இணைந்துகொண்டது.

இச்சேவையில் மீன்கள் கொண்டு செல்வதற்கோ சாராயம் எடுத்துச் செல்வதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குமுதினிப்படகு ஊழியர்களுக்கு ஆர்.டி.ஏ. எனப் பொறிக்கப்பட்ட சீருடைகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - குறித்த படகுச் சேவை மூலம் பெருமளவான வியாபாரிகள் மீன்களை எடுத்துவருவது வழமை.

தற்போது மீன்களை எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் தனியே ஒரு படகை இதற்கென அமர்த்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## உதயன் செய்திக்குப் பலன்

# நுணாவில் - கனகன்புளியடிச் சந்தி வீதியோரங்கள் சாவகச்சேரி நகரசபையால் துப்புரவு செய்யப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப். 26

மக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியோரங்களில் காணப்பட்ட பற்றைகள் சாவகச்சேரி நகரசபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்திக்குச் செல்லும் வீதியே இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் எல்லை வீதியாக இவ்வீதி அமைந்திருந்தபோதிலும் வீதியின் பராமரிப்பினை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரே மேற்கொண்டுவந்தனர்.

அண்மைக் காலமாக இவ் வீதியின் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தது.

இவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அனுபவித்த சிரமங்களைச் சுட்டிக்காட்டி உதயனில் செய்தி வெளியாகியதையடுத்து நகரசபை ஊழியர்கள் இந்த வீதியின் இருமருங்கினையும் துப்புரவு செய்து மக்கள் போக்குவரத்தினை இலகுபடுத்தியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (203-207)

# கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் கலை, இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கரவெட்டி,பெப்.26

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச செயலர் பிரிவில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இலக்கியப் போட்டியில் 2008ஆம் ஆண்டுக்கான போட்டிகளுக்கு கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மக்களிடையே இலக்கியம் மற்றும் கலாசாரம் தொடர்பான புத்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் நூல்களை வாசிக்கவும் ஆய்வு செய்யவும் வழிப்படுத்தும் நோக்குடனும் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடலாக்கம் ஆகிய போட்டிகள் கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

பிரதேச மட்டப் போட்டிகள் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னரும் மாவட்டப் போட்டிகள் ஏப்ரல் 10 திகதி தொடக்கம் மே 10ஆம் திகதி வரையும் மாகாண மட்டப் போட்டிகள் மே 10ஆம் திகதி தொடக்கம் ஜூன் 10ஆம் திகதி வரைக்கும் தேசிய மட்டப் போட்டிகள் ஜூன் 10ஆம் திகதி தொடக்கம் ஜூலை 10ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளன.

ஒவ்வொரு மட்டத்திலும் இடம்பெறும் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

16 வயதுக்குட்பட்ட பிரிவில் பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பிரிவெனா மாணவர்கள் கனிஷ்ட பிரிவிலும் 16 தொடக்கம் 19 வயதுக்குட்பட்டோர் சிரேஷ்ட பிரிவிலும் 19 வயதிற்கு மேற்பட்டோர் திறந்த பிரிவிலும் போட்டிகளில் பங்குபற்றமுடியும்.

விண்ணப்பங்களை மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் வழங்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (203-70)

# இளம் சந்ததியினரிடையே நூல் வாசிக்கும் பழக்கம் அருகுகிறது; இக்குறைபாட்டை உள்ளூராட்சி சபைகள் நிவர்த்தி செய்யவேண்டும்

## வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.26

இளம் சந்ததியினா மத்தியில் நூல்களை வாசிக்கும் பழக்கம் பல்வேறு காரணங்களாலும் அருகி வருகின்றது. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக நூல்களின் மேலான ஈர்ப்பு இளம்சந்ததியினரிடையே அதிகரிக்கும் விதமான செயற்பாடுகளை உள்ளூராட்சி சபைகள் மேற்கொள்ள முன்வரவேண்டும்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் வடபகுதியில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கேட்டுள்ளார்.

உலக புத்தக தினம் ஏப்ரல் 23ஆம் திகதியாகும்.

இதனை முன்னிட்டு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இளம் சந்ததியினர் நூல்களில் நாட்டம் கொள்ளத்தக்க வகையிலும் அவர்களது கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் உள்ளூராட்சி சபைகளின் நூலகங்கள் முன்வரவேண்டும்.

இச்செயற்[illegible] உள்ளூராட்சி சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்வரவேண்டும்.

தகவலையும் அறிவையும் தரும் நூலகங்கள் நாட்டின் கருவூலங்கள் ஆகும் என்றும் நூல்களை ஆக்கவும் - கருத்துகளை வளர்க்கவும் ஆவணத்தொகுப்பு உதவும்.

உலக ஒருமைப்பாட்டை வளர்க்க நாடுகளிடையே நூல்கள் சரளமாகப் பரிமாறிக் கொள்ளப்படவேண்டும்.

உலக மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள - வளர - சிறந்த நூல்கள் பெரும் [illegible] - என்றார். (203-95)

# சைவநெறித் தேர்வு முடிவு பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.சைவபரிபாலன சபையால் 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வுக்கான பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2008ஆம் ஆண்டுக்கான தேர்வு நவம்பர் முதலாம் திகதி நடைபெறும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை: நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாண்வர். களை இணைத்துக்கொள்வதற்கான நேர் முகப் பரீட்சை இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

ஈராண்டு பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2006/2008, முழுநேர பட்டப் பின் கல்வி டிப்ளோமா 2006/2007 ஆகிய கற்கை நெறிகளுக்கு இணைத்துக் கொள் வதற்கென நடைபெற்ற எழுத்துப் பரீட்சை யில் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கே நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வர்களின் விவரம் வருமாறு:

ஏ.அபர்ணா (கொக்குவில்), பி.அங்க யற்செல்வி (யாழ்ப்பாணம்), ஜி.அன்ரனி தவச்செல்வம் (திருநெல்வேலி), பி.ஆரணி (நீர்வேலி), எஸ்.அரவிந்தன் (சுழிபுரம்), கே. பகீரதி (துன்னாலை), ரி.பாலகிருஷ் ணன் (கோண்டாவில் கிழக்கு), கே.பாலமுரு கன் (சுழிபுரம்), கே.பாலேந்திரன் (கரவெட்டி), ஜே.சந்திராணிபா (கந்தர்மடம்),

எஸ்.கௌசியா (துன்னாலை), பி.தேவகி (துன்னாலை வடக்கு), எஸ்.இளங்கோ (கோண்டாவில் மேற்கு), எஸ்.ஜெகாந்தன் (மீசாலை), ஆர்.ஜெனால்ட் அன்ரனி (ஊர் காவற்றுறை), கே.ஜெயசுதா (சரசாலை வடக்கு), எம்.ஜெயவனிதா (சரசாலை வடக்கு), எஸ்.ஜெயவரதன் (புன்னாலைக் கட்டுவன்), எம்.யூஜின் கலிஸ்ரஸ் (உடுவில் வடக்கு), கே.கலையரசி (கொக் குவில் கிழக்கு), எஸ்.கலைவாணி (கொக் குவில் கிழக்கு), எஸ்.கல்பனா (நல்லூர்.), என்.கந்த தாசன் (அல்வாய்), கே.கவிதா (துன்னாலை மத்தி), என்.கீதபொன்கலன் (யாழ்ப்பா ணம்), கே.கோடீஸ்வரன் (அரியாலை மேற்கு), எஸ்கோகுலன் (யாழ்ப் பாணம்), ஜே.கௌசீதகி (தாவடி வடக்கு), என். கிருஸ்ணகுமார் (கரணவாய் கிழக்கு), கே.கல் யாணி (உரும்பிராய்),

ரி.குலதீபன் (வட்டு.மேற்கு), கே.குமுதா (கோண்டாவில் மேற்கு), எம். லோகதர்சினி (கோண்டாவில் மேற்கு), எஸ்.லோகேஸ்வரி (திரு நெல்வேலி), கே. லோகேஸ்வரன் (கரணவாய் தெற்கு), கே. மகீந்தன் (மட்டுவில் தெற்கு), எஸ்.மகேஸ் வரி(யாழ்ப்பாணம்), வை.மஞ்சுளா (நெல் லியடி), வி.மணிவர்மன் (வதிரி), வி.மணி வதனன் (வதிரி), எஸ்.மஞ்சுளா (கைதடி வடக்கு), கே.மேரி கொன்சலா (பாஷை யூர்), எஸ்.மதிர்சனி (கரவெட்டி வடக்கு), வி.மதிவதனா (கோண் டாவில் கிழக்கு), எம்.மதிவதனி (யாழ்ப்பாணம்), ரி.மைதிலி (நல்லூர்), ஏ.நளாயினி (யாழ்ப்பாணம்), கே.நளிந்தினி (யாழ்ப்பாணம்), ரி.நவறூபன் (அரியாலை), ஏ.நிருபராணி (கைதடி),

எஸ்.நோபேர்ட் உதயகுமார் (இளவா லை), பி.பஞ்சவதனி (உடுவில் கிழக்கு), வி.பிரபாளினி (யாழ்ப்பாணம்), பி.ராகவ ன் (சுழிபுரம்), என்.றஜிதா (நெல்லியடி), எம்.ராஜசிலோசனா (கைதடி), எஸ்.ராஜி னி (கோண்டாவில் மேற்கு), எஸ்.ரஞ்சினி (நெட் டிலிப்பாய்), ஜே.ராதா (திருநெல் வேலி), கே.சந்திரலிங்கம் (கோப்பாய் தெற்கு),

எஸ்.சசீபன் (கொடிகாமம்), எஸ்.சசி கலா (வரணி), வே.செல்வகுமார் (வரணி), பி.சாந்தநாயகி (கொக்குவில்), எஸ்.சிவக ரன் (கோண்டாவில் மேற்கு), வே.சிவப் பிரகாசம் (ஓட்டுமடம்), எஸ்.சிவ ரஞ்சினி (யாழ்ப்பாணம்), எஸ்.சிவராதிகா (நீர் வேலி), எஸ்.சியாமளா (சங்கானை), கே. சோபனா (திருநெல்வேலி),

என்.சொர்ணாம்பிகைமலர் (சுன்னா கம்), என்.சுபாங்கி (மானிப்பாய்), பி.சுகிர்தா (உரும்பிராய்), எஸ்.சுகுணா (மல்லா கம்), எஸ்.சுகுணமதி (மானிப்பாய்), வி.சுமதி (திருநெல்வேலி), யூ.சுரேஸ்குமார் (பருத் தித்துறை), எம்.சுரேஸ்குமார் (தெல்லிப் பழை), ஜி.சுதாமதி (கொக்குவில்), பி.தமிழ் பிரியா (ஈச்சமோட்டை),

எம்.தனலக்ஷ்மி (சுழிபுரம்), எஸ். தாரிணி (கந்தர்மடம்), ரி. தர்சினி (அராலி கிழக்கு), கே.தவகுமாரன் (வண்ணை. கிழக்கு), ஆ.தேவரஞ்சினி (தொல்புரம் கிழக்கு), கே. தயாளினி (கந்தர்மடம்), என். தீபாஜினி (அளவெட்டி), ஏ. தீபன் தெலி சன் (யாழ்ப்பாணம்), ஜி. தில்லைரஞ்சினி (ஆனைக்கோட்டை),

ரி. திருச்செல்வி (கொக்குவில்), வி. துவாரகன் (மானிப்பாய்), எஸ். உகாந்தினி (உடுப்பிட்டி), எம்.உசாயினி (நல்லூர் வடக்கு), எஸ். உதயகுமாரி (கரணவாய்), கே. உதயசீலன் (அல்வாய்), பி.வாகீசன் (யாழ்ப்பாணம்), எஸ்.வனஜா (மானிப்பாய்), எஸ்.வனஜா (குப்பிளான்), கே.வாணி முகுந்தன் (பருத்தித்துறை),

எம்.வசந்தா (உடுப்பிட்டி), வி.வசந்த குமார் (வல்வெட்டித்துறை), பி.வசந்தன் (அரியாலை), கே.வசந்தரூபன் (தெல்லிப் பழை), பி.வாசுதேவன் (திருநெல்வேலி வடக்கு), ரி.வதனி (வட்டுக்கோட்டை), ஆர்.வத்சலா (திருநெல்வேலி மேற்கு), கே.வெண்ணிலா (புத்தூர் மேற்கு), இ. விக்ரோறியா (ஆனைக்கோட்டை), பி. விஜிதா (சுன்னாகம்)

ஆர். விஜயதீபன் (வேலணை-2), ஜே. விஜயவாணி பிறின்ஸ் (மானிப்பாய்), ஸ். விஜிதா (அல்வாய் கிழக்கு), எஸ். விக்னேஸ் வரன் (ஆனைக்கோட்டை), என். விமல குமார் (சாவகச்சேரி), வை. விமலன் (கல்வி யங்காடு), கே.விமலநாயகி (கரவெட்டி), எஸ். வினோதா (சுன்னாகம்), ஏ.வசந்தினி (யாழ்ப் பாணம்), எஸ்.யசோதா (புலோலி மத்தி),

வி.யசோதா (சங்கானை), கே.ஹேமலதா (நல்லூர்), ரி.ரவீந்திரநாதன் (கட்டைப்பி ராய்), ரி.றொமேசன் (கொக்குவில் கிழக்கு), கே.சிறிஸ்கந்தராசா (ஊர்காவற்றுறை), எஸ்.சுபர்ணா (நல்லூர் தெற்கு), எஸ்.பாலாம் பிகை (கொக்குவில் மேற்கு), எஸ்.சுகந் தினி (உரும்பிரய்), என்.சசிகலா (கோப்பாய் தெற்கு), ஜி.காந்திமதி (சித்தங்கேணி), எஸ்.செந்தூரன் (அளவெட்டி கிழக்கு)

(202-111)



உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர் கௌரவிப்பு விழா அண்மை யில் இடம்பெற்றது. பேராசிரியர் கே.கணேசலிங்கம் மங்களவிளக் கேற்றுவதையும் பிரதம விருந்தி னர்களாகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் ஏ.பஞ்சலிங்கம், கோப்பாய் செஞ்சிலுவைச் சங் கப் பிரதிநிதி அ.மயில்வாகனம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: லக்ஸ்மன்)*


# பதினோராம் நாள் ஆத்மார்த்த காணிக்கை



அமரர்

ஸ்ரீலஸ்ரீ கைலாசநாதக் குருக்கள்

திருஞானசம்பந்தக் குருக்கள்

தீவுப்பகுதி மக்களின் ஆன்மார்த்த கிரியைகளை
விதிப்படி சிறப்பாகச் செய்து,
அவர்களின் ஆன்ம
ஈடேற்றத்திற்கு வழிகாட்டியாக விளங்கிய
சைவசித்தாந்த அறிஞர்
அமரர் ஸ்ரீலஸ்ரீ கைலாசநாதக் குருக்கள்
திருஞானசம்பந்தக் குருக்கள்
(கரணவாய்க் குருக்கள், தென் இந்திய
வேதார்ண்ஜ ஆதீன தர்மகர்த்தா)

சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப்
போற்றி வளர்த்த உத்தமர்!
சைவநெறி முறை தவறாது அனைத்து இந்து சமய
மக்களுக்கும் தீட்ஷை வைத்து, அனுட்டானம்
விபூதி போன்றவற்றை வழிதவறாமல்
அனுசரிக்க வைத்து உதவிய பெருமகன்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள்
சர்வசித்து மாசி (26.02.2008)
செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு
பாடாண உத்தாபனமும் நாளை (27.02.2008)
புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு
சபீண்டீகரணமும் நடைபெறவுள்ளன.

(ஜ/551583)

**வேணி களஞ்சியம்**
*பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு.*

**கரணவாய் குருக்கள் பகுதி மக்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING

## UNIVERSITY ADMISSIONS ACADEMIC YEAR 2007/2008

UCSC

## APTITUDE TESTS FOR THE SELECTION OF CANDIDATES FOR THE BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY AT THE UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC), THE VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA AND THE RAJARATA UNIVERSITY OF SRI LANKA

Applications are hereby invited for the Aptitude Tests conducted separately by each of the above Higher Educational Institutions, viz: University of Colombo School of Computing, Vavuniya Campus of the University of Jaffna and Rajarata University of Sri Lanka from candidates who possess the minimum requirements for University Admissions as specified under section 3.2 of the Hand Book on "Admission to the Undergraduate courses of the Universities in Sri Lanka Academic year 2007/2008" issued by the University Grants Commission.

A pass in the relevant Aptitude Test conducted by the Higher Educational Institution concerned is a pre-requisite to be eligible to be considered for the above programmes of study. Hence candidates who have submitted their applications for University Admission for the academic year 2007/2008 to the University Grants Commission indicating their preference to be considered for the above programme of study are required to sit the Aptitude Test conducted by the respective Higher Educational Institution.

**ELIGIBILITY FOR THE APTITUDE TEST**

Candidates should have fulfilled the additional requirements listed in section 8.4.6 of the above UGC Hand Book 2007/2008 (page 31) in order to be considered for these programmes.

**PROCEDURE FOR APPLICATIONS**

1. Candidates are required to prepare their own application form on A4 size paper **in English** in accordance with the format given below

**OR**

Download the specimen application form from the UCSC website http://www.ucsc.cmb.ac.lk

2. Candidates should submit their applications for the Aptitude Test(s) to the Higher Educational Institution to which they wish to be considered for admission to the Bachelor of Information and Communication Technology Programme as per the guidelines given below. (Eg. If a candidate wishes to be considered for the Bachelor of Information and Communication Technology Programme conducted by the Rajarata University of Sri Lanka, he/she should submit his/her application to the Rajarata University of Sri Lanka).
3. **Certified copies** of the G.C.E. Advanced Level Certificate, G.C.E. Ordinary Level Certificate and the National Identity Card (or Postal Identity Card) should be sent along with the duly filled application form. (Certificates should be certified by the School Principal or a Justice of Peace). The Official Stamp of the certifying officer should be placed on such certified copies. **Original certificates should not be sent.**
4. Candidates are required to send a self addressed (un-stamped) Envelope of 9"x 12" size along with the application form. This envelope will be used to post the admission card for the Aptitude Test to candidates.
5. Method of payment, submission of Applications & the details of the Aptitude Tests are given below:

| UCSC | Vavuniya Campus | Rajarata University |
|---|---|---|
| (1) The Aptitude Test fee of Rs. 250/- should be paid to any branch of the People's Bank by using People's Bank normal cash paying-in-slip drawn in favour of the *University of Colombo School of Computing* People's Bank Account No: 086-1001-211-90316 (Thimbirigasyaya Branch). **Cheques / Money orders will not be accepted.** | (1) The aptitude test fee of Rs. 250/-should be paid to any branch of the Bank of Ceylon by using Bank of Ceylon normal cash paying-in-slip drawn in favour of the *Vavuniya Campus of the University of Jaffna, Bank of Ceylon, Vavuniya Account No: 2364602* **Cheques / Money orders will not be accepted.** | (1) The aptitude test fee of Rs. 250/-should be paid to any branch of the Bank of Ceylon by using Bank of Ceylon normal cash paying-in-slip drawn in favour of the Rajarata University of Sri Lanka Bank of Ceylon Account No:5022117 (Mihintale Branch). **Cheques / Money orders will not be accepted.** |
| (2) Applications can be sent only under registered cover to reach the Senior Assistant Registrar/Examinations and Registrations, UCSC, No. 35, Reid Avenue, Colombo 07 **on or before 07th March 2008.** Please indicate on the top left hand corner of the envelope the title "BICT – Aptitude Test 2007/2008". If you do not receive the Admission Card by 27.03.2008, please contact the Admission Division of the UCSC (Tel. No: 0112581245/47 Ext. 610/611) | (2) Applications can be sent only under registered cover to reach the Senior Assistant Registrar, Examinations & Student Services, Vavuniya Campus, Park Road, Vavuniya **on or before 14th March 2008.** ( Tel.No.024 – 2223317 / 024-2222265 – Ext. 205 )Please indicate on the top left hand corner of the envelope the title "BICT – Aptitude Test 2007/2008"and **indicate the preferred Examination centre whether Vavuniya or Jaffna.** | (2) Applications can be sent only under registered cover to reach the Senior Assistant Registrar, Faculty of Applied Sciences Rajarata University of Sri Lanka, Mihintale, on **or before 07th March 2008** ( Tel.No.025 – 2266780 / 025-2266131)Please indicate on the top left hand corner of the envelope the title "BICT – Aptitude Test 2007/ 2008". |
| (3) Date of Aptitude test: 29th March 2008 | (3) Date of Aptitude Test: 05th April 2008. | (3) Date of Aptitude Test: 20th of April 2008. |

**Notes:**

(I) Please note that the candidate's copy of the cash paying-in-slip has to be sent along with the application form whilst retaining a photocopy for candidates' records.

(II) If any difference exists in the name indicated in the application and the certificates, an affidavit should be submitted to confirm that they relate to one and the same person.

(III) The Admission Cards would be issued to candidates who have satisfied the necessary admission requirements for the Aptitude Test.

(IV) **All Aptitude Tests will be conducted only in the English medium.**

(V) Application will be rejected if:

(a) Candidate does **not possess the minimum admission requirements for the Aptitude Test**
(b) Application is **not accompanied by a bank cash paying-in-slip and duly certified copies of the G.C.E. A/L and G.C.E. O/L certificates, and the NIC/Postal ID.**
(c) **Application is incomplete**
(d) **Application is not received by the closing date**

**Senior Assistant Registrar**
**University of Colombo School of Computing**

**Date 21st February 2008.**

*(P.T.O.to page 06.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசோவோ போன்று வடக்கு, கிழக்கு ஒருநாள் வேறு நாடாக அங்கீகரிக்கப்படும் நிலைமை ஏற்படலாம்

கொழும்பு,பெப்.26

ராஜபக்ஷ கூட்டணியினரின் முட்டாள்தனமான போரினால் வடக்கு, கிழக்கு ஒருநாள் வேறு நாடாக அங்கீகரிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். கொசோவோவை அமெரிக்காவும் வேறு உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அந்த நிலைக்கு இலங்கையும் தள்ளப்பட்டால் அந்தப் பிழையைத் திருததிக்கொள்ளவே முடியாத நிலைஏற்படும்.

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் 'இருதின' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் போரை முடிவிற்கு கொண்டு வருவதாக முனனர் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தெரிவித்திருந்து.

எனினும் போருக்கு அவ்வாறு கால நிர்ணயம் செய்யமுடியாது என இப்பொழுது கூறுகின்றனர்.

இராணுவத் தளபதியும் அதற்குச் சமமான ஒரு கருத்தையே அண்மையில் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவிற்குச் சென்று நேரடியாக பிரபாகரனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இந்த பிரச்சினையைத் தீர்ப்பதாக மகிந்த ராஜபக்ச முன்னர் கூறியிருந்தார். அப்படி கூறிய மகிந்த ராஜபக்ச குறைந்த பட்சம் வன்னிக்கு அப்பால் சென்ற காலம் கூட எமக்கு நினைவு இல்லை.

அதன் பின்னர் போர் தொடங்கியது.

போர் தொடங்கிய காலத்தில் விடுதலைப் புலிகளை ஓட ஓட விரட்டுவதாக கூறினார்கள். அதன் பின்னர் அனைத்துப் பக்கங்களாலும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தி விட்டதால் அடுத்த மார்ச் மாதமளவில் விடுதலைப் புலிகளை முழுமையாக தோற்கடித்து போரை நிறைவு செய்யவுள்ளதாக தெரிவித்தனர்.

இப்பொழுது சொல்கின்றனர் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு தமக்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் தேவைப்படும் என்று.

இப்பொழுது 2008 ஆம் ஆண்டு 2 ஆம் மாத இறுதிப் பகுதியில் இருப்பதால் அவர்கள் கூறும் இந்த ஒன்றரை வருடம் பூர்த்தியாவது 2009 ஆம் ஆண்டு கடைசியில் ஆகும்.

2009 டிசம்பர் வரை போரின் பெயரால் இந்த அரசாங்கத்தை கொண்டு செல்லவே மகிந்த ராஜபக்ச அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

2010 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் பொதுத தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்படி வேலை செய்ய முடியாத மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் உள்நோக்கமானது இந்த அரசாங்கத்தை போரின் பெயரால் அடுத்த பொதுத் தேர்தல் வரை இழுத்துச் செல்வதாகும்.

இந்த அரசாங்கம் கடந்த 3 வருடத்தில எதனையும் செய்யவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனது 2 வருட காலத்திற்குள் செய்திருப்பவற்றுடன் ஒப்பிடுகையில் இந்த அரசாங்கம் கடந்த 3 வருடங்களில் எதனையும் செய்யவில்லை.

அவர்கள் செய்திருப்பது எல்லாம் மக்களை ஏமாற்றி நாட்டின் பொருளாதாரத்தை சின்னாபின்னமாக்கி முழு நாட்டையும் பாதுகாப்பற்ற போரின் பொறிக்குள் சிக்கவைத்தது மட்டுமே ஆகும்.

## போர்நடவடிக்கையின் விளைவு குறித்து எதிர்வு கூறுகிறது சிங்களப் பத்திரிகை

இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டியது இந்த அரசாங்கம் இன்னும் ஒன்றரை வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தால் இந்த நாட்டிற்கு என்ன நேரும் என்பதனைப் பற்றித்தான்.

இன்னும் ஒன்றரை ஆண்டுகள் போர் இழுபட்டுச் செல்லும் என்பது ஒருபக்கத்தில் போரினால் எமது பொருளாதாரத்தை பலி கொடுக்க வேண்டியேற்படும் என்பதனை குறிப்பிடத் தேவையில்லை.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் எந்தத் திசையில் இடம் பெறும் என்பதனை எவரும் முன்கூட்டியே சொல்ல முடியாது. அதனால் இந்த போர் எதிர்காலத்தில் எந்த அழிவை நோக்கிச் செல்லும் என்பது பற்றி யாராலும் சொல்ல முடியாது.

வேலை செய்து காண்பிக்க வேண்டுமாயின் மகிந்தவுக்கு இந்த மூன்றாண்டு போதுமானது. வேலை காண்பித்திருந்தால் இந்தப் போரை இப்பொழுது பாதி முடித்திருக்கவேண்டும்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் 5,000 - 6,000 பேர் உண்மையில் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை உண்மையாக தெரிவிக்கப்படவேண்டும்.

அவர்கள் கூறும்படி பார்த்தால் தற்பொழுது விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ள இராணுவப் பொறுப்பாளர்கள் பலர் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் நாம் அறிந்த வரையில் பிரபாகரன் இன்னும் அப்படியே உள்ளார்.

அது தவிர பொட்டு அம்மான், சூசை, பால்ராஜ், சார்ள்ஸ் அந்தனி, தீபன், சொர்ணம், பதுமன், பானு ஆகிய இராணுவத் தளபதிகளுக்கு இராணுவத்திடமிருந்து மட்டுமல்ல சிறு எறும்பினால் கூட பாதிப் புகள் ஏற்படவில்லை.

இந்த அரசாங்கம் உண்மையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை மட்டுமே உயிரிழக்கச் செய்யும் வகையில் தாக்கியது. தமிழ்ச்செல்வன் விளையாட்டிற்கு அல்ல உண்மையிலேயே இறந்தார்.

பிரபாகரன் பல தடவைகள் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் இதுவரை உண்மையில் கொல்லப்படவில்லை.

அதனை எதிர்காலம் தான் பொறுப்பேற்க வேண்டும்.

மேலும் போரைத் தொடர்ந்து சரியாக செய்திருந்தால் இப்பொழுது விடுதலைப் புலிகளின் இராணுவப்பிரிவு முன்னணித் தலைவர்கள் சிலராவது கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

அப்படி அவர்கள் உயிரிழக்க மாட்டார்கள். உயிரிழப்பது கொழும்பு மற்றும் அதனையண்டிய பிரதேசங்களில் இருக்கும் வெள்ளை வேனினால் கடத்தப்படும் இலகு இலக்குகளே.

கடினமான இலக்குகள் இந்த மூன்று வருடங்களில் கேலியாகக் கூட உயிரிழக்கவில்லை.

அப்படியாயின் இந்த மூன்று வருடங்களில் என்ன நடந்துள்ளது. போரின் பெயரால் பொதுமக்களின் சொத்துக்கள் அழிக்கப் பட்டமை தான் நடந்துள்ளது.

### அனைத்துலகும் ஓரங்கட்டுகிறது

தற்பொழுது மனித உரிமைமீறல், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வு முன்வைக்காமை ஆகியவற்றினால் சிறிலங்காவானது அனைத்துலக ரீதியாக ஓரங்கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் GSP+ திட்டத்தின் கீழ் கிடைக்கும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கான கோட்டாவும் கிடைக்காது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆடைத் தொழிற்சாலைக்கான கோட்டா கிடைக்காது போனால் இந்நாட்டு இளைஞர், யுவதிகள் 10 லட்சம் பேரளவில் வீதிக்கு வருவார்கள்.

இன்று ஐரோப்பிய ஒன்றியமும் ஏனைய அனைத்துலக சமூகமும் இந்நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளை நிலை நாட்டுமாறு அழுத்தம் கொடுக்கின்றன.

10 லட்சம் பேர் வேலையின்றி வீதியில் இறங்குவதனைப்பற்றி இந்த அரசாங்கம் நினைக்கவில்லை.

போரின் பெயரால் இவை அனைத்தையும் பொறுத்துக் கொள்ளுமாறே அரசாங்கம் கூறுகிறது.

போர் உக்கிரமடைந்து ஒருதூரம் வரை இந்த பயணம் இவ்வாறே சென்றால் வடக்கு- கிழக்கு கொசோவோ போன்று தனியே பிரிந்து செல்வதற்கு இடமுள்ளது.

இன்று கொசோவோவை அமெரிக்கா உட்பட்ட அனைத்துலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ராஜபக்ச கூட்டணியினரின் செயற்பாடுகளினால் இந்த முட்டாள்த்தனமான போரினால், என்றாவது ஒருநாள் வடக்கு-கிழக்கு வேறு நாடாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலைக் குத் தள்ளப்பட்டால் அந்தப் பிழையை மீண் டும் திருத்திக்கொள்ள முடியாதநிலை ஏற்படும்.

தற்பொழுது செல்லும் இந்த முட்டாள்த்தனமான பயணத்தின் முடிவானது சில வேளைகளில் அதுவாகவும் இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ★

(Contd.From page 05.)

**SPECIMAN APPLICATION FORM**

For office use only

**UNIVERSITY ADMISSION ACADEMIC YEAR 2007 / 2008**
**APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDTES FOR**
**BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY**
**AT THE** ..........................................................................................

[Insert the name of the institution]

1. Surname with Initials in block letters
(leave one blank cage between surname and initials and between initials)

2. Full Name in block letters
(leave one blank cage between names)

3. Address in block letters
(leave one cage between different segments of the address)

4. Sex
Male
Female

5. Results of G.C.E. (A/L) Examination 2007
Index No. | District
Z score | Contact Telephone No.

Subjects offered & Grades (indicate grade in cage appearing against the respective subject)

| | |
|---|---|
| Higher Mathematics | Mathematics/Combined Mathematics |
| Physics | Chemistry |
| Accounting | Business Statistics |
| Economics | Business Studies |
| Biology | Geography |
| Logic & Scientific Method | Latin |
| Sanskrit | Music (Oriental, Carnatic, Western) |

6. G.C.E. (O/L) Examination

| | | Grade | Year |
|---|---|---|---|
| Results for | Mathematics | | |
| | English | | |

7. Courses of Study applied for University Admission (in the order of preference indicated in the application submitted to the University Grants Commission):
1. .................................. 2. .................................. 3. ..................................
4. .................................. 5. .................................. 6. ..................................

8. Documents to be attached (Please indicate the documents attached with the application form by using " symbol in the relevant boxes below).
01. Cash paying-in-slip
02. Certified copy of G.C.E. (A/L) 2007 Examination results
03. Certified copy of G.C.E. (O/L) Examination results
04. Certified copy of National ID card or postal ID Card
05. Affidavit in support of change in names appearing in different documents / certificate, if any.

I certify that the above particulars submitted by me are true and accurate.

..............................
**Signature of Applicant** .............................. **Date**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.புனித பொஸ்கோ வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளின்போது வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி பாடசாலைக் கொடியை ஏற்றிவைப்பதை முதலாவது படத்தில் காணலாம். மாணவர்களின் அணிவகுப்பையும் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களையும் அடுத்துவரும் படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## சண்டிலிப்பாய் பிரதேச வலைப்பந்தாட்டம்: இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனானது

வலி.வடக்கு,பெப்.26

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் சுறுசுறுப்பாக இருந்தபோதிலும் சில நிமிடத்தில் இந் நிலை ..யில் மாற்றம் காணப்பட்டு சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். முதல்பாதி ஆட்டம் முடிவடையும்போது இந்து அணி 22:03 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் 19:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட முடிவில் இந்து விளையாட்டுக் கழகம் 41:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)

## ஏழு கழகங்கள் களத்தில் மோதுகின்றன வலி.வடக்கு பெண்கள் உதைபந்தாட்டத்தில்

வலி.வடக்கு,பெப்.26

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஏழு கழகங்களின் அணிகள் விளையாடுவதற்குத் தங்களைப் பதிவுசெய்துள்ளன.

அடுத்த மாதம் 8ஆம் திகதி மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இந்த அணிகள் விளையாடவுள்ளன.

மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம், மல்லாகம் எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம், அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகம், அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் பாரதிதாசன் விளையாட்டுக் கழகம், அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகம், அளவெட்டி விநாயகர் விளை யாட்டுக் கழகம் என்பனவே இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள கழகங்கள் ஆகும். (1-86)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.26

கைதடி சேதுகாவலன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி இ.திருஞானசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (1)

## சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் 12 சாதனைகள் முறியடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் இந்தாண்டு 12 புதிய சாதனைகளைக் கல்லூரியின் வீரர்கள் முறியடித்து புதிய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

1972ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு சாதனைகள் உட்பட 12 புதிய சாதனைகள் ஏற்படுத்தியுள்ளமையை புதிய அதிபர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் பெரிதும் பாராட்டியுள்ளார்.


15 வயதுப் பிரிவில் நான்கு சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 80 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 1981ஆம் ஆண்டு எஸ்.ஜே.ஜெயசீலனால் ஏற்படுத்தப்பட்ட 14.7 செக்கன் என்ற சாதனையை இந்தாண்டு சி.எல்விஸ் சமப்படுத்தியுள்ளார்.

100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1985 ஆம் ஆண்டு ஜே.ஆர்.பிராங்கிளின் ஏற்படுத்திய 12.8 செக்கன் என்ற சாதனையை இந்தாண்டு சி.எல்விஸ் 12.7 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் மற்றுமொரு சாதனையை சமப்படுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1999ஆம் ஆண்டு ஜீ.செல்வின்லொயிட்டினால் ஏற்படுத்தப்பட்ட 1.08 என்ற சாதனையை எ.அஜித் டாவின் 1.07.6 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

மற்றும் 4x100 மீற்றர் அஞ்சல் ஓட் டப் போட்டியில் 1972ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மத்தியூஸ் இல்லத்தின் 55.8 செக்கன் என்ற சாதனையை டன் இல்லம் 55 செக்கனில் ஓடி முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

17 வயதுப் பிரிவில் மொத்தம் ஏழு சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. உயரம் பாய்தலில் 1988ஆம் ஆண்டு கே.கமில்ரன் 1.58 மீற்றர் என்ற உயரத்தை பாய்ந்து ஏற்படுத்திய சாதனையை முறியடித்து ஜே.எறிக் பிரதாப் 16.1 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் 12 சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. 3 வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் உட்பட, இம்முறை இடம்பெற்ற தடகளப் போட்டியில் முறியடிக்கப்பட்டுள்ளன. சாதனைகளை முறியடித்த வீரர்கள் கல்லூரி அதிபர் வண.ஜெறோ செல்வநாயகத்துடன் இணைந்து நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2006ஆம் ஆண்டு வி.யூட் கேதீசன் 16.8 செக்கன்களில் ஓடி ஏற்படுத்திய சாதனையை ஜே.எறிக்பிரதாப் 16.1 செக்கனில் ஓடிப் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் இந்தாண்டின் இரண்டு புதிய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பாச்சலில் 2006ஆம் ஆண்டு 11.22 மீற்றர் தூரம் பாய்ந்து எஸ்.மிரேஸ் ஏற்படுத்திய சாதனையை ஏ.ரி.ஏ.அன்ரன் நிதர்சன் 11.79 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

சி.ஜக்சன் மூன்று சாதனைகளை ஏற்படுத்தி கல்லூரி மட்டத்தில் சம காலத்தில் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளமையிட்டு கல்லூரி மட்டத்தில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளார். இவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1994ஆம் ஆண்டு எச். நிருபன் 12.3 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை 12 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1994ஆம் ஆண்டு எச். நிருபன் 25.6 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை சி.ஜக்சன் 24.3 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1972ஆம் ஆண்டு சி.பி. லோறன்ஸ்பிள்ளை 59 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை சி.ஜக்சன் 55.8 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் 36 வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்திய நீண்டகாலத்திற்கான சாதனையையும் முறியடித்துள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் 1980ஆம் ஆண்டு பொஞ்சீன் இல்லத்தினால் 52.1 செக்கனில் ஓடி முடிக்கப்பட்ட சாதனையை லோங் இல்லம் 50.7 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

19 வயதுப் பிரிவில் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2007 ஆம் ஆண்டு ஆர்.ஜெனின் 18.6 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை வி.யூட் கேதீசன் 16.2 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## மென்பந்து, சதுரங்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையம் தனது ஆறாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி மென்பந்து, சதுரங்கப் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஏழுபேர் கொண்ட 6 பந்துப் பரிமாற்ற மென்பந்துச் சுற்றுப்போட்டியையும் சதுரங்கப் போட்டியையும் பொது அறிவுப் போட்டியையும் பொதுநூலகம் நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்களை நாளை மறுதினம் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)



அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் - மாணவிகளின் ஓட்டப்போட்டி, உடற்பயிற்சி ஆகியவற்றை முதலிரு படங்களிலும் மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளைமுகாமையாளர் மு.சிவநேசன் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதை அடுத்துவரும் படத்திலும் காணலாம். *(படம்: சுந்தா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் பிரதேசத்திற்கென பனை, தென்னை கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், பெப்.25

நெடுந்தீவு பிரதேசத்திற்கென முதன் முறையாக பனை, தென்னைவள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கடந்த 18 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங் கம் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் அங்கு இந்தக் கூட் டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்படாது இருந்தமையால் பனை, தென்னை வள உற்பத்தியாளர்கள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.

இப்பிரதேச மக்களின் வேண்டு கோளுக் கிணங்கப் புதிதாக இந்த பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப் பட்ட இந்த சங்கத்தினால் உற்பத்தி யாளர்கள் பெரும் நன்மையடைவதோடு இப்பிரதேசத்தில் இதுவரை காலமும் நிலவிய குறைபாடு நீங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்தச் சங் கம் முதற்கட்டமாக மூன்று கிளை நிலை யங்களை அமைத்து செயற்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## கொக்குவில் மேற்கில் 150 பேருக்கு இலவச கண்ணாடி

வலி.தென் மேற்கு,பெப்.26

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க சன சமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் கண்பார்வை குறைந்த 150 பேருக்கு கண் பரிசோதனை செய்யப் பட்டு அவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங் கப்பட்டன.

கடந்தவாரம் நடைபெற்ற இந்த மருத் துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்டவர் களுக்கு இலவச மருத்துவ சிகிச்சையும் மருந்துகளும் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சிவராணி, டாக்டர் வி. ரட்ணசிங்கம், டாக்டர் கே. ஈஸ்வரி ஆகியோர் இந்த மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும் மேற்கொண்டனர். (135)

## சிறாம்பியடி வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறாம்பியடி வீதி கடந்த 48 வருடங்களுக்கு மேலாகப் புனரமை ப்புச் செய்யப்படாது உள்ளமையால் போக்குவரத்துச் செய்ய முடியாது மக்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விடுமாறு உரியவர்களுக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் பலன் எதுவும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதி போக்குவரத்துக்கு மூடப்படும் வேளையில் இந்த வீதியையே மக்கள் பயன்படுத்துகின்றனர். இதனால் போக்குவரத்து நெரிசல் மிக்க வீதியாக இது காணப்படுகிறது. எனவே உரியவர்கள் விரைவில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203- 95)

## போத்தலில் அடைக்கப்பட்ட 'கள்' விற்பனை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.மாவட்டத்தில் போத்தலில் அடைத்து விற்க்கப்படும் கள்ளின் விற்பனை திடிரென வீழ்ச்சியடைந்துள்ளதாக மாவட்ட பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பொ. மோகன் தெரிவித்துள்ளார்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் பாதுகாப்பான முறை யில் போத்தலில் அடைத்து விற்கப்படும் இந்த கள் விற்பன்ன இன்றி தேங்கி இருப்பதாக கூறினார்.

2007 ஆம் ஆண்டில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் கூட விற்பனை இன்றி சங்கங்களில் தேங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போத்தல் கள்ளின் விற்பனை வீழ்ச்சியால் சில பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் கள்ளின் உற்பத்தி அதிகரித்துள்ள போதும் அதன் விற்பனை வீழ்ச்சிய டைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (203-224)

## வாசகர் திருமுகம்

### 751 ஆம் இலக்க பேருந்துச் சேவையின் சீரின்மை

பருத்தித்துறைச்சாலை பேருந்துச் சேவையின் பலராலும் விமர்சனத்துக்குள்ளாக் கப்படும் ஒரு சேவை 751 ஆம் இலக்க பருத்தித்துறை-யாழ்ப்பாணம் சேவையாகும். இப்பாதை 750 ஆம் இலக்கப் பாதையுடன் ஒப்பிடும்போது நீண்ட தூரத்தையும் அதிக பிரதேசங்களையும் ஊடறுத்துச் செல்கின்றது.

நாங்கள் தினமும் காலையில் 6.30 மணிக்குப் பருத்தித்துறையிலிருந்து புறப்படும் 751 ஆம் இலக்கப் பேருந்தில் பயணம் செய்து மாலையில் 3.00 மணிக்கு யாழ்ப் பாணத்திலிருந்து புறப்படுவோம். ஆனால் தற்போது பேருந்துக்களுக்கான உதிரிப் பாகங்கள் போதியளவு இல்லாமையினால் குறிப்பிட்டளவு பேருந்துக்கள் குறித்த சாலையில் முடங்கிக் கிடக்கின்றன. இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து 751 ஆம் இலக்க பாதையூடாக 2.30 மணிக்கு ஒரு பேருந்தும் அதன் பின்னர் இரண்டு மணித்தியாலங்கள் கழித்து 4.30 மணிக்கு கடைசிப் பேருந்துமாக இயக்கப்படுகின்றன. முக்கியமாகப் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், அலுவலகங்களில் பணிபுரிவோர் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு யாழ்ப் பாணம் வருவோர் 3.00 மணிக்கு செல்லும் பேருந்தையே இதுவரை பயன்படுத்தி வந்தனர். ஆனால் கடந்த 15.02.2008 முதல் இச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. முன்னர் 2.00 மணி, 3.00 மணி, 4.30 மணி என மூன்று சேவைகள் மாலையில் நடைபெற்று வந்தன. இதனை இரண்டு சேவையாகக் குறைத்ததால் மூன்று மணிக்கு புறப்படும் பேருந்திற்கு வருவோர் 1 1/2 மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டிய நிலையேற் பட்டுள்ளது. இப்பொழுது இராணுவத்தினரின் வாகனத்தொடரணியினால் பாதைகள் மூடப்படுவது சற்றுக் குறைந்திருந்தும் எங்களால் குறித்த நேரத்திற்கு வீடு செல்ல முடியவில்லை.

கீழ்வரும் பிரச்சினைகள் இ.போ.ச. பருத்தித்துறைசாலைப் பொதுமுகாமையாளர் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

1) 2.30 மணிக்கும் 4.30 மணிக்குமிடையில் 751 ஆம் இலக்கப் பேருந்துச் சேவை எவையும் நடைபெறாமை -

2) பேருந்து ஓட்டுநர்கள் 751 ஆம் இலக்க பேருந்துச் சேவையில் தங்கள் பேருந் தினை இயக்க பின்னடிக்கின்றனர். அதற்கு யாழ்.பேருந்து தரிப்பிடத்தில் இருக்கும் நேரக்கணிப்பாளர்கள் ஓட்டுநருக்கு இசைவாகச் செயற்படுகிறார்களே தவிர பயணிகள் இரண்டு மணித்தியாலங்களாகக் கஷ்டப்படுகிறார்களென யோசிப்பதில்லை.

3) குறிப்பிட்ட மாதத்திற்குரிய பிரயாணச்சீட்டுத் தொகையை முற்பணமாகச் செலுத்தி பருவகாலச் சீட்டினைப் பெற்றும் சீரான சேவையினை தாங்கள் செய்யாமைக்கான நியாயம் கேட்பதற்கு எங்களுக்கு உரிமையுண்டு.

4) 2.30 மணிக்குப் பின்னர் 4.30 மணிக்குத்தான் 751 ஆம் இலக்க பேருந்தை இயக்குவோமென நீங்கள் காரணம் கூறினால் 750 ஆம் இலக்க பேருந்துக்கு மட்டும் மேற் குறிப்பிட்ட நேர இடைவெளியில் 5 பேருந்துக்களை இய[illegible] இது எந்தவகை யில் நியாயமாகும்.

நாவலடி- உடுப்பிட்டி. சி.மதுரன்.

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...



சாவகச்சேரி பு.வேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற விஜயதசமி நிகழ்வில் சிறார்கள் நடத் திய கலை நிகழ்விதின் போது எடுக் கப்பட்ட படம்.




ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்ற பொங்கல் விழா நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம்.

பாடசாலை அதிபர் ந. சிவகடாச்சம் உரையாற்றுவதையும் மூத்த நயினார் ஆலயப் பிரதமகுரு கிருஸ்ணேஸ்வரக் குருக்கள், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமி மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (100)



உரும்பிராய் செல்வபுரம் கிராமத்தில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் எடுக்கப்பட்ட படம்.



சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தில் அண்மையில் அந்தண வெளிவாரி, உள் வாரி மாணவர்களுக்குப் பரீட்சை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (203)

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற இராசையா முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற வங்கியாளர் விமலாதேவி ஜெயராசவுக்கு முன்பள்ளி மாணவன் ஒருவன் மாலை அணிவிப்பதையும் அருகில் ஆசிரியை திருமதி ஜெ.கௌரிதேவி நிற்பதையும் படத்தில் காணலாம். (203)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பயனில்லாத 13 ஆவது திருத்தம்

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் குறித்து இப்போது அதிகம் பேசப்படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால ஏற்பாடு இது என்பது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டியபடி அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைக்க-

அதுவே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு யோசனை என்ற வெளிப்படுத்தலுடன் அதை நடைமுறைப்படுத்துவது குறித்து பிரலாபிக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தனது தேசத்தின் உயர் சட்டப் புத்தகமாக இலங்கை போற்றி மதிக்கும் அரசமைப்பில் இருபது வீருடங்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டும், இற்றைவரை அதை நடைமுறைப்படுத்தி, அதில் குறிப்பிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கலைக் கூடத் தமிழர்களுக்குச் செய்ய முன்வராத சிங்களம், இப்போது நிலையை எல்லை மீறும் ஆபத்து தென்படும்போது அந்தளவுக்காவது அதிகாரப் பரவலாக்கம் செய்யும் விட்டுக்கொடுப்புத் தாராளம் தனக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முயல்கிறது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, அவர்களது நீதியான அபிலாஷைகளை நிறைவுசெய்து விடலாம் என்று சர்வதேச சமூகத்துக்குப் படம் காட்டுகின்றார் இலங்கை ஜனாதிபதி.

இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அரசமைப்பில் சேர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் கூட, ஒப்பந்த வாசகங்களையோ, அந்த ஒப்பந்தம் மூலம் நிறைவு செய்யப்பட வேண்டியவை எனத் தமிழர்கள் எதிர்பார்த்த ஆகக் குறைந்த அம்சங்களையோ பதின்மூன்றாவது திருத்தம் கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை.

இதை, இந்த அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்த சட்ட நகல் தயாரானபோதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர் மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர், அச்சமயம் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவருக்கும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அரசமைப்பின் இந்தப் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு வழி செய்த இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களின் உள்மனக்கிடக்கையை உள்வாங்கி அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல.

இலங்கைத் தேசத்தின் 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசமைப்புகள் ஒருதலைப்பட்சமாக இலங்கை பௌத்த பேரினவாத சக்திகளால் ஈழத் தமிழர்களின் கருத்துக்களை உள்வாங்காமல், பலவந்தமாக ஈழத் தமிழர் மீது திணிக்கப்பட்டமைபோல -

இலங்கை - இந்திய ஒப்பந்தமும் கூட ஈழத் தமிழர்களின் விருப்புக்கு மாறாகவே இந்த இரு பெரும் தேசங்களாலும் தமிழர் தேசம் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. இதை ஒட்டிய இந்தியாவின் நரித் தந்திர வேலையை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் 'தேசத்தின் குரல்' அன்டன் பாலசிங்கம் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்:-

*"ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் தனது தேசிய பாதுகாப்புக்கும், புவியியல் நலன்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக இந்தியா கருதியது. தனது நலன்களுக்கு விரோதமான அந்நியச் சக்திகள் இலங்கையில் ஊடுருவல் செய்திருப்பதால் தனது பாதுகாப்புச் சூழலுக்குப் பங்கம் ஏற்படலாமென இந்தியா அஞ்சியது. இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து, அங்கு ஊடுருவி நின்ற அந்நிய சக்திகளை வெளியேற்றி, தனது தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே இந்தியா இலங்கையில் தலையிட்டது.*

*"இனக்கொலைப் பரிமாணத்தில் மோசமடைந்த தமிழரின் இனப்பிரச்சினை இந்தியத் தலையீட்டுக்கு வழி சமைத்துக் கொடுத்தது. உலகத்தின் மனச்சாட்சியை உறுத்திய ஈழத் தமிழரின் அவலநிலை இந்தியத் தலையீட்டுக்கான தார்மீக நியாயப்பாடாகவும் அமைந்தது. தமிழரின் பிரச்சினையை முதன்மைப்படுத்தி, இலங்கை விவகாரத்தில் குறுக்கீடு செய்த இந்தியா, தமிழரின் உரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்தித் தனது தந்திரோபாய நோக்கை அடைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியத் தேசிய, புவியியல் நலன்களைப் பேணுவதாகவே அமைந்தது.*

*"ஆனால் இந்த ஒப்பந்தம் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை. மாறாக, அது தீங்கு விளைவிப்பதாக அமைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இலங்கையின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் முன்னுரிமை கொடுப்பதுடன் அவற்றிற்குப் பாதுகாப்பு உத்தரவாதமும் அளிக்கிறது. இந்த ஒப்பந்தம் இலங்கையில் இறுக்கமான, நெகிழ்வற்ற, ஒற்றையாட்சி அரசமைப்புக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைகிறது. இதனால் தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகத்தில் முழுமையான அதிகாரமுடைய சுயாட்சி அரசை நிறுவக்கூடிய இடைவெளியையும் அது மூடிவிட்டது."*

- இவ்வாறு மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிடும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை, இருபது வருடங்கள் கழித்துத் தூசுதட்டிக் கையிலெடுத்துக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் நாடகமாக அரங்கேற்றுகின்றார் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

அதிகாரத்துக்காகவும், அரசியல் இருப்புக்காகவும், சுய ஆதாயத் துக்காகவும் அரசுத் தலைமையுடன் ஒண்டிக்கொண்டிருக்கும் சில தமிழர் தரப்புகள் இந்தப் பதின்மூன்றாவது திருத்தம் என்ற மாயமானை நம்பி வழமைபோல நன்றிக்கடனாக ஆதரிக்கலாம்.

ஆனால், ஈழத் தமிழர்களின் ஒட்டுமொத்தத் தரப்பை இந்தத் திட்டம் பெயரளவிலேனும் திருப்திப்படுத்தப் போவதில்லை.

ஆக, இனப்பிரச்சினைக்கு நியாயமான - சாத்தியமான- நீதியான - தீர்வு ஒன்றை முன்வைக்காமல் காலத்தைக் கடத்தி, விடயத்தை இழுத்தடிக்கும் தென்னிலங்கையின் வழமையான தந்திரோபாயத்துக்கு உதவும் நல்லதொரு காய் நகர்த்தலாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயல்கிறோம் என்ற அரசுத் தலைமையின் இந்த எத்தனம் அமையும் என்பது மட்டும் நிச்சயம்.

# அடுத்த போகத்திற்கு தேவையான விதைநெல்லை இப்போதே சேமிக்கக் கோருகிறார் உதவி ஆணையாளர்

## தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கவும் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப்.26

அடுத்த காலபோகத்திற்குத் தேவையான விதை நெல்லை யாழ். மாவட்டத்தின் சகல விவசாயிகளும் சேமித்து வைக்க வேண்டும் என யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கேட்டுள்ளார்.

தென்பகுதியில் இருந்து மாவட்டத்திற்கு விதைநெல்லைக் கொண்டு வருவதில் ஏற்படும் தாமதங்களையும் செலவினங்களையும்கருத்தில்கொண்டு அடுத்தகால போகத்திற்குத் தேவையான விதைநெல்லை சேமித்து வைக்குமாறு அனைத்து விவசாய சம்மேளனங்கள் ஊடாக அறிவுறுத்தல் வழங்குமாறும் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் உதவி ஆணையாளர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த பெரும் போகத்திற்கென தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்பட்ட நல்லின விதை நெல் வர்க்கங்கள் மூலம் 60ஆயிரம் புசல் தரமான நெல் விளைச்சல் கிடைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நெல் முழுவிதையும் நுகர்வுத்தேவைக்குப் பயன்படுத்தாது விதை நெல் தேவைக்கும் பயன்படுத்தலாம். இதன் மூலம் அடுத்த கால போகத்திற்கு விதை நெல் தட்டுப்பாடு ஏற்படாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தரமான விதை நெல்லை விவசாயிகளிடையே பரிமாற்றம் செய்யவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதவி ஆணையாளர் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (202-111)

## பரப்புரைக் கூட்டம்

வலி.தென் மேற்கு,பெப்.26

வேலணைத் தெற்கு தீவகம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவில் மஸ்தியஸ்தர் சபை குறித்த விழிப்புணர்வு பரப்புரைக் கூட்டம் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ச.சண்முகநாதன்தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சபையின் நோக்கங்கள் குறித்தும் மக்கள் மத்தியில் அதன் செயற்பாடுகள் குறித்தும் விளக்கமளிப்பட்டது. (203-111)

## 1980 ஆம் ஆண்டுடன் செயலிழந்துபோயுள்ள புகையிலைச் சங்கங்களைப் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.26

1980 ஆம் ஆண்டுடன் செயலிழந்த யாழ். மாவட்ட புகையிலைச் சங்கங்கள் மீளப் புனரமைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட கூட்டுறவு திணைக்களத்தின் கீழ் செயற்பட்ட 11 புகையிலை சங்கங்களே மீள் புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க உப தலைவர் ச. செல்வரத்தினமும்-சண்டிலிப்பாய் பிரதேச சிரேஷ்ட மத்தியஸ்தருமான சி.பொ.வ.மா.க. முதலியார் ஆகியோர் இணைந்து இத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

கடந்த காலங்களில் வடலியடைப்பு, மாதகல், அராலி, செட்டியார் மடம், கெருடாவில் பகுதி உள்ளிட்ட 11 புகையிலை சங்கங்கள் மிக வினைத்திறன் முறையில் இருந்ததாகவும் தற்போது இதன் சொத்துக்கள், கட்டடங்கள் அழிவடைந்து செல்வதாகவும் கூறப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளரின் ஒப்புதல் பெற்று மாற்றுத்திட்டங்கள்முன்வைத்துஉரிய பிரதேச கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-95)

# வடபோர் முனையில் மூன்றுமாத காலமாக இராணுவத்தால் முன்னேற முடியவில்லை

வடபோர் முனைகளில் 3 மாத காலமாக முன்னேற முயற்சித்தும் சிறிலங்கா இராணுவத்தினரால் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை என்று அனைத்துலக ஊடக நிறுவனமான ஏ.எ.ப்.பி. தெரிவித்துள்ளது.

இலங்கை களநிலைமைகள் தொடர்பாக ஏ.எ.ப்.பி. வெளியிட்டுள்ள ஆய்வுக்கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு:

விடுதலைப் புலிகளை முறியடிக்கப் போவதாக சிறிலங்கா அரசு தெரிவித்து வரும் நிலையில் போர் மேகம் சிறிலங்காவை பெருமளவில் ஆட்கொண்டுள்ளது.

ஆனால் கடந்த தசாப்தங்களாக நடைபெற்று வரும் போர் முடிவுக்கு வருவது நிச்சயமற்றதாகவே தெரிகின்றது.

மகிந்த அரசில் உள்ள அரசியல்வாதிகள் அமைதி உடன்பாட்டை குழிதோண்டி புதைத்துள்ளதுடன், விடுதலைப் புலிகளை முறியடிக்கப் போவதாகவும் தெரிவித்து வருகின்றனர்.

நிச்சயமாக நாம் போரில் வெற்றி பெறுவோம் என்று சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும் போரை முற்றாக முடிவுக்குக் கொண்டுவருவோம் என்று நாம் எப்போதும் கூறவில்லை. நாம் அதற்கான முடிவு நாளையும் அறிவிக்க

## மிகைப்படுத்தப்படும் அரச பிரசாரம்

வில்லை. நாம் மரபு வழியிலான சமரில் ஈடுபடவில்லை. விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கி வருகின்றோமே தவிர அவர்களை முற்றாக முறியடிக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் படை நடவடிக்கையை மேற்கொண்ட அரசு கடந்த வருடத்தில் இருந்து அதனை வடக்கிற்கு நகர்த்தியுள்ளது. வடக்கில் மும்முனைகளில் தாக்குதல்களை நடத்தி வருவதாக படைத்தரப்பு தெரிவித்து வருகின்றது.

ஆனால் அவர்களால் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை.

அமைதிப் பேச்சுக்களுக்கான சாத்தியங்களை அரசு முற்றாக புறம்தள்ளியுள்ள போதும் முன்னரை போல அல்லாது இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா போர் தொடர்பாக விடுத்துவரும் அறிக்கைகளின் அழுத்தம் குறைந்து வருகின்றது.

முடிவு நாளை குறிவைத்தே அல்லது ஒருநேர இடைவேளைக்குள் முடிப்பது குறித்தோ நான் போரை நடத்தவில்லை என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கடந்த 25 வருடங்களாக நடைபெற்றுவரும் போரை எதிர்வரும்

## ஏ.எவ்.பி.ஆய்வில் தெரிவிப்பு

மார்ச் மாதத்திற்கு முன்னர் முடிக்க முடியுமா? என்று அவர் கேள்வியும் எழுப்பியிருந்தார்.

ஆனால் கடந்த காலங்களில் சரத் பொன்சேகா தொடர்ச்சியாக பல முடிவு நாள்களை அறிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் போரை முடித்துவிடப் போவதாக அவர் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் இறப்பு தொடர்பாக அரசு தெரிவித்து வரும் தகவல்களும் குழப்பமானவை.

பாதுகாப்புத் தரப்பு நாளாந்தமும் வெளியிட்டு வரும் விடுதலைப் புலிகளின் இறப்புத் தொகைகளை நோக்கும் போது படைத்தரப்பு வெற்றியீட்டுவதாகவே தோன்றும்.

இருந்த போதும் அதற்கு ஆதாரமாக விடுதலைப் புலிகளின் சடலங்கள் காணப்படுவதில்லை.

கடந்த இரு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இது அவர்களின் மொத்த எண்ணிக்கைக்கு இணையானது.

விடுதலைப் புலிகளிடம் 5,000 பேர் உள்ளதாக சரத் பொன்சேகா கடந்த பெப்ரவரி 10 ஆம் நாள் தெரிவித்திருந்தார்.

இது கடந்த ஆண்டு டிசம்பர் அவர் கூறியதனை விட 2,000 அதிகமாகும்.

எண்ணிக்கை தொடர்பாக தெரிவிக்கப்படும் தகவல்கள் பிரசாரப் போராகும்.

1972 ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்றுவரும் போரில் பல 10,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர்க்களத்தில் என்ன நடைபெறுகிறது என்பது தொடர்பாக அரசின் அறிக்கைகள் தான் வெளிவருகின்றன.

அங்கு படைத்துறையைச் சாராத எவரும் செல்ல முடியாது.

தமது தாக்குதல்களில் பெருமளவிலான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்து வருகின்ற போதும் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவம் தமது நிலைகளுக்கு பின்வாங்கி விடுகின்றது.

இராணுவத்தினர் நகரும் மும் முனைகளிலும் விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக படைத்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

தலைநகரான கொழும்பு தற்போது படையினர் நிறைந்த பகுதியாக மாற்றம் பெற்றுள்ளது.

ஆயிரக்கணக்கான படையினரும், காவல்துறையினரும், ஊர்காவல் படையினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வீதிகளில் 24 மணி நேரமும் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அங்கு நிச்சயமற்ற தன்மை தோன்றியுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இப்படியான அரசை நாம் இதுவரையிலும் காணவில்லை. சிங்களப் பத்திரிகைகள் அரசின் பிரச்சாரங்களையே தாங்கி நிற்கின்றன. எனவே தென்னிலங்கை மக்கள் இராணுவத்தீர்வில் அதிக நம்பிக்கை கொண்டு வருகின்றனர்.

ஆனால் அரசினால் மேற்கொள்ளப்படும் மிகைப்படுத்தப்பட்ட பிரசாரங்களில் இருந்து அவர்கள் மீண்டு வருவது கடினம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தற்போதைய பிரச்சனைகளுக்கான ஒரே வழி பேச்சுவாரத்தை தான் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

போரின் மூலம் வெற்றி பெறலாம் என்று அரசு நம்புவது முட்டாள்த்தனமானது. விடுதலைப் புலிகள் கருதுவதும் அத்தகையதானதே. இராணுவம் போரை 2009 ஆம் ஆண்டுக்கும் இழுத்துச் செல்லப் போகின்றது.

போர் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பதனை நான் நம்பவில்லை. இறுதியில் இரு தரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பியே ஆக வேண்டும் என்று அவர் தெரிவித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

மாசி - 15 புதன்கிழமை
27.02.2008

திதி : விசாகம்
பி.ப. 06.15 வரை

நட்சத்திரம் : சஷ்டி
பி.இ. 04.08 வரை

சுபநேரம் : 04.59 - 06.29

ராகுகாலம் : 12.29 - 01.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதோ!**

**சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஒளஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/54169)


## யோகாசன, தியான வகுப்புகள் ஆரம்பம்

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் அமைந்துள்ள சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தில் யோகாசன, தியான புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி இந்த வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என்று நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதலாம்திகதிக்கு முன்னர் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203)

## திருட்டா? உழைப்பா? உயர்வானது

மனித வாழ்வில் உயர்வு என்பது அவனது உழைப்பின் ஊக்கத்திலும், தன்மையிலும் தங்கியுள்ளது. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கடின உழைப்பினால் சம்பாதிக்கும் செல்வம் உதவும். அதேபோல் ஆன்மீக வளத்தைப் பெற சீரியநெறிமுறையிலான நேரிய உழைப்பு வழிகாட்டுகிறது. உழைக்காதவன் உண்பதற்குத் தகுதியற்றவன்.

லஞ்சம், திருட்டு, மோசடி, வழிப்பறி, ஏமாற்று உத்திகள் மலிந்துவிட்ட இக்காலத்தில் நாம் சம்பாதிக்கும் பணம் நேர்வழி சார்ந்ததா? குறுக்கு வழியானதா? என்று சிந்திக்க வேண்டும்.

ஒருவன் வியர்வை சிந்தி உழைத்து, கடன்பட்டு ஒரு வீட்டைக் கட்டினான். அமைதியாக வாழ்ந்துவரும் வேளை துரதிஸ்டவசமாக இடம்பெயர்வுகள் ஏற்பட்டது. மீண்டும் வந்தபோது கதவுகள் பிடுங்கப்பட்டிருந்தது. உடைமைகள் திருடப்பட்டிருந்தது. ஓடுகள், கற்கள் என வீடே காணாமல் போய்விட்டிருந்தது. இவ்வாறு பல வீடுகள், பொதுச் சொத்துக்கள் பாதிப்படைகின்றமை வழமையாகிவிட்டது.




இவற்றைத் திருடுபவர்களுக்கு ஒன்றை உருவாக்கிய உழைப்பின் களைப்போ, அவற்றின் பெறுமதியோ தெரிவதில்லை. திருட்டுப்பணம் விரைவில் தீர்ந்துபோகும் என்பதை உணராது சுயநலம் அவர்களை ஆட்டுவிக்கிறது. சட்டமும், திட்டமும் மட்டும் திருடர்களை திருத்திவிடாது.

உனது உடமைகளுக்கு இவ்வாறு இழப்பு ஏற்பட்டால் என் மனம் என்ன பாடுபடும் என்ற சுய உணர்வே திருட்டை ஒழிக்க வழிகோலும்.

- எஸ்.யோசுதாஸ்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 26 - 12 - 1966 | 26 - 02 - 2001 |



### திருமதி சித்திரா மகாலிங்கம் (கலா)

எத்தனை உறவுகள் வந்தாலும் எத்தனை தாய்மாரைச் சந்தித்தாலும்
உன் பாசத்திற்கும் பண்புக்கும் இத்தரைமீது எல்லையில்லையம்மா!
எம் தெய்வமே! ஆண்டேழு போனாலும் ஆறவில்லை எம்துயர்
மாறவில்லை உன் வதனம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு. (71441)

கணவர், பிள்ளைகள்
உறவினர்கள்.

## சமய சந்நிதிகளில்

இளவாலை ஆனைவிழுந்தான விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திரு விழா நடைபெற்று மார்ச் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் நடை பெறவுள்ளன. (203-135)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.26

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 6ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

## நூலக வாசகர் வட்டத்தில் பொதுக்கூட்டம்

வலி.தென்மேற்கு,பெப்.26

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப பணிமனை நூலகவாசகர் வட்டத்தின் இந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் உப பணிமனையின் பொறுப்பதிகாரி ரா.தேவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் நூலகத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வாசகர்கள் இதில் கலந்துகொண்டனர்.

நூலகத்துக்கு மாணவர்களின் பயன்பாட்டுக்குத் தேவையான கல்வி சார் நூல்களைக் கொள்வனவு செய்வது போன்ற பல்வேறு விடயங்கள் இதில் தீர்மானிக்கப்பட்டன. வாசகர் வட்டத்தின் தலைவராக ஞா.தேவச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக நூலகர் திருமதி த.மதிமுருகன் தெரிவு செய்யப்பட்டார். (203-135)

## தென்மராட்சிப் பிரதேச கலைஞர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.26

தென்மராட்சி பிரதேசத்தில் சிறப்பு சேவையாற்றிய கலைஞர்கள், எழுத்தாளர்கள் படைப்பாளிகள் ஆகியோரிடமிருந்து கலாபூஷணம் விருது பெறுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக் கூத்து ஊடகத்துறை ஆகியவற் றில் சிறப்புச் சேவையாற்றிய 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இவ் விருதிற்காக விண்ணப்பிக்கலாம்.

பிரதேசத்தைச் சேர்ந்த தகைமையுடையவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரிடம் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவுத் திகதி இன் றாகும்.

(203-207)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### சட்டத்துறை விரிவுரைகள் மீள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களுக்கான அனைத்து விரிவுரை வகுப்புகளும் எதிர்வரும் திங்கட்கிழமை (03.03.2008) அன்று ஆரம்பமாகும்.

2004/2005 அணி மாணவர்களுக்கான இரண்டாம் ஆண்டு - இரண்டாம் அரையாண்டுப் பருவ விரிவுரைகள் எமது கொழும்பு நிலையத்தில் (கொழும்பு தமிழ்ச் சங்கம், இல.7, 57வது ஒழுங்கை, கொழும்பு - 6) இடம்பெறும்.

2005/2006 & 2006/2007 அணி மாணவர்களுக்கான முதலாம் ஆண்டு விரிவுரைகள் யாழ்.பல்கலைக்கழக திருநெல்வேலி வளாகத்தில் இடம்பெறும்.

அனைத்து மாணவர்களும் தவறாது விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

25.02.2008. பதிவாளர்

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் நாகமுத்து சற்குணபாலா

(ஆங்கு - ஜேர்மனி)

| தாய் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 05 * 12 * 1965 | 26 * 02 * 1994 |

திதி: 26.02.2008

பதின் நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தது ஐயா!
உன் பால் முகம் காண வருவீரா ஐயா!
ஓடி ஓடி உழைத்தும் எதைக் கண்டாய் ஐயா!
உன் இனியவர்களை காண வருவீரா ஐயா!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

உம் பிரிவில் வாடும்:
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

M.N.மகேந்திரன்,
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி. (71433)

## சேவை நலன் பாராட்டு



சாவகச்சேரிநகர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கடந்த பத்து ஆண்டுகளாகச் சங்கத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து எம்மை வழிநடத்தியதோடு, இடைக்காலத்தில் பொலிவிழந்த சாவகச்சேரி நகரத்தின் பல சிரமதானப் பணிகளை முன்னெடுத்து எம்மோடு சேர்ந்து உழைத்து, நகரின் அபிவிருத்திக்காக அயராது பாடுபட்ட எமது கிராம அலுவலர்

### திரு.வை.இராஜரட்ணம்

அவர்களின் மாண்புறு சேவையினைப் பாராட்டுகின்றோம்.
அவர் கிராம அலுவலர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும்
அவரின் பொதுப்பணி மேலும் சிறந்திட, ஓய்வுக்காலம்
இனிதே அமைந்திட ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டச்சு வீதி,
சாவகச்சேரி. (71368)

சாவகச்சேரிநகர்
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
சாவகச்சேரி.

## நீங்காத நினைவுகளுடன்....

31ம் ஆண்டில்... நன்றி நவில்கிறோம் 45ம் நாளில்...



திரு.கு.விபுலானந்தன்

மண்ணில் 14.06.1950 விண்ணில் 14.02.1977



திருமதி.ப.விபுலானந்தன் (செட்டி)

மண்ணில் 16.01.1950 விண்ணில் 13.01.2008

எம் அன்னையின் உயிரை உடலில் தங்க வைக்க போராடிய யாழ் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவு வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கும் சிற்றூழியர்களுக்கும், எம் அன்னை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட யாழ் பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகார சபை (R.D.A) உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும், உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் தொலை தூரத்தில் இருந்து தொலைபேசி தந்தி வழியாக ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் சகல வழிகளிலும் சகல உதவிகளையும் செய்த அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

11, சின்னாலங்கண்டு வீதி,
அரியாலை.

என்றும் உங்கள் நினைவுடன்...
பிள்ளைகள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
திருமதி பாமாருக்மணிதேவி
பத்மநாதன்
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி நாகலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(71437)

## 7ஆம் ஆண்டு நினைவு

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 26 * 12 * 1966 | 26 * 02 * 2001 |



### திருமதி மகாலிங்கம் சித்திரா (கலா)

எமைவிட்டு நீ பிரிந்து ஏழாண்டு வந்ததம்மா
ஏனோ இந்த வேதனையை எமக்களித்தாய் இறைவா?
எழு பிறப்பும் உனைக்காண ஏங்கி நிற்கும் இதயங்களுடன்
சாந்தி பெற வணங்குகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்!
அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்

# 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வாகைசூடியது தென்னாபிரிக்கா



மிர்பூர், பெப்.26

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வாகைசூடியது.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மிர்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வந்தது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 192 ஓட்டங்களையும், தென்னாபிரிக்கா அணி 70 ஓட்டங்களையும் பெற்றன.

22 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆம் இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி 182 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்படி 205 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு தென்னாபிரிக்காவுக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

வெற்றிக்கு 27 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்றது. களத்தில் நின்ற டீ வில்லியர்ஸ், அஸ்வெல் பிரின்ஸ் ஆகியோர் சிறப்பாக ஆடி நம்பிக்கை தந்தனர். இருவரும் தம்மிடையே 5ஆவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் அஸ்வெல் பிரின்ஸ் 38 ஓட்டங்களுடன் சஹரட் ஹொசைனின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

தொடர்ந்து இணைந்த டீ வில்லியர்ஸ் - மார்க் பௌச்சர் ஜோடி அணிக்கு நேற்றைய ஆட்டத்தின் 11ஆவது ஓவரில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது. டீ வில்லியர்ஸ் 19 ஓட்டங்களுடனும், மார்க் பௌச்சர் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக 5 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜக் கலிஸ் தெரிவானார்.

பங்களாதேஷ் அணி பங்குபற்றிய 52 டெஸ்ட் போட்டிகளில் 46ஆவது தோல்வியை நேற்றுப் பதிவுசெய்தது. அத்துடன் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான 5ஆவது தொடர் தோல்வி இதுவாகும். அந்த அணிக்கு எதிரான மற்றைய நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் இன்னிங்ஸ் தோல்வியையே பங்களாதேஷ் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிட்டகொங்கில் ஆரம்பமாகின்றது.

---

இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்

## இலங்கை தோல்வி

கோலாலம்பூர், பெப்.26

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த காலிறுதியாட்டத்தில் இலங்கை அணி, நியூஸிலாந்து அணியிடம் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் அரையிறுதியாட்ட வாய்ப்பை இலங்கை அணி நழுவவிட்டது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ணப் போட்டி நடக்கிறது. நேற்று நடந்த காலிறுதியாட்டம் ஒன்றில் இலங்கை, நியூஸிலாந்து அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய நியூஸிலாந்து 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. இலக்கைக் கலைத்த இலங்கை அணி 42.1 ஓவர்களில் 133 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்று இறுதியாட்ட வாய்ப்பைப் பெற்றன.




## ஐ.பி.எல். போட்டியைத் தவிர்க்க ஆஸி. வீரர்களுக்கு ஆலோசனை

மெல்போர்ன், பெப். 26

இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால் இந்திய பிறீமியர் லீக் போட்டியில் விளையாடுவதை ஆஸ்திரேலிய வீரர்கள் தவிர்க்க வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

பெனாஸிர் படுகொலை செய்யப்பட்டதால் பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரில் விளையாட ஆஸி. வீரர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், இந்தியாவிலும் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்திருக்கின்றமையால் ஆஸி. வீரர்கள் ஐ.பி.எல். போட்டியில் விளையாட வேண்டாம் என ஆஸி. வெளியுறவு மற்றும் வர்த்தகத்துறை அறிவுறுத்தியுள்ளது.

---

# இறுதியாட்ட வாய்ப்பை உறுதி செய்யுமா இந்தியா?

## இலங்கையுடன் இன்று பலப்பரீட்சை

ஹோபாட், பெப்.26

கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடரின் 11ஆவது போட்டியில் இன்று இலங்கை, இந்திய அணிகள் பலப்பரீட்சையில் ஈடுபடுகின்றன.

இன்றைய போட்டியில் இந்திய அணி வெல்லும் பட்சத்தில் அந்த அணியின் இறுதியாட்ட வாய்ப்பு உறுதிசெய்யப்படும். இல்லாவிடின் இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கிடையிலான முடிவில் இந்தியாவின் இறுதியாட்ட வாய்ப்புத் தங்கியிருக்கும்.

இலங்கை அணி இன்றைய போட்டியில் வெல்வதோடு, ஆஸ்திரேலியாவுடனான போட்டியிலும் வென்றாலேயே அந்த அணிக்கு இறுதியாட்டத்திற்கும் நுழையும் வாய்ப்புக் கிடைக்கும்.

இன்றைய போட்டி இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனால் இந்தப் போட்டியில் விறுவிறுப்புக்கும் பரபரப்புக்கும் பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இஷாந்துக்கு அபராதம்


சிட்னி, பெப். 25

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முத்தரப்புத் தொடரின் 10ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் அன்ட்ரூ சைமண்ஸுடன் வார்த்தை மோதலில் ஈடுபட்டதன் காரணமாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந் சர்மாவுக்கு அவரது ஊதியத்தில் 15 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வீரர் சைமண்ஸை இஷாந்த் சர்மா ஆட்டமிழக்கச் செய்தார். அப்போது இஷாந், சைமண்ஸை நோக்கி தனது விரலை நீட்டி மரியாதைக் குறைவாக நடந்து கொண்டாரென குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை, இஷாந் சர்மாவுக்கு அவரது ஊதியத்தில் 15 சதவீதம் அபராதம் விதித்துள்ளது.

---

# நான்கு ஒஸ்கார் விருதுகளை வென்றது 'நோ கன்ட்ரி போ.:.ர் ஓல்ட் மென்'



விருதுடன் நடிகை மரியன் காட்டிலர்ட்

லொஸ் ஏஞ்சல்ஸ், பெப்.26

ஹொலிவூட் இன் நான்கு ஒஸ்கார் விருதுகளை 'நோ கன்ட்ரி போர்ஓல்ட்மென்' என்ற திரைப்படம் தட்டிச் சென்றுள்ளது.

இந்தப் படத்தை இயக்கிய ஜோயல் கோயன் மற்றும் ஈதான் கோயன் ஆகிய சகோதரர்கள் சிறந்த இயக்குநர்களுக்கான விருதை வென்றெடுத்தனர்.

அத்துடன் சிறந்த தயாரிப்பாளர், சிறந்த துணை நடிகர் ஆகியவற்றிற்கான விருதுகளையும் இத் திரைப்படம் வென் றெடுத்துள்ளது.

ஹொலிவூட் திரைப்படங்களை மையமாக வைத்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டுவருகின்றன. இந்த ஆண்டு 80 ஆவது தடவையாக ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன. விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் ஹொலிவூட் நகரான லொஸ் ஏஞ்சல்ஸில் கோலாகலமாக நடைபெற்றது. ஹொலிவூட் திரைப்படப் பிரபலங்கள் கலந்துகொண்ட இந்த வண்ணமயமான விழாவில் இந்த ஆண்டு ஒஸ்கார் விருதுக்கா தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த நடிகைக்கான விருதை பிரெஞ்சு நடிகையான மரியன் காட்டிலர்ட் வென்றெடுத்தார். ஸலா வை என் ரோஸ்' படத்தில் இடித் பியாப் வேடத்தில் நடித்தமைக்காக அவர் இந்த விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டிருந்தார். சிறந்த துணை நடிகைக்கான விருது டில்டா ஸ்வென்டனுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருதை டேனியல் டே லூயிஸ் வென்றிருக்கின்றார். 'தோ வில் பிளட்' எனும் படத்தில் நடித்தமைக்காக அவர் இந்த விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டார். லூயிஸ் சிறந்த நடிகருக்கான விருதை வென்றெடுப்பது இது இரண்டாவது தடவையாகும். ஏற்கனவே 1989ஆம் ஆண்டு இவர் சிறந்த நடிகர் விருதை வென்றெடுத்துள்ளார்.

(சி)

# சேர்பிய அமைச்சர்கள் கொசோவோவிற்கு சர்ச்சைக்குரிய விஜயத்துக்குத் திட்டம்

பெல்கிரேட், பெப்.26

கொசோவோவிற்கு சர்ச்சைக்குரிய விஜயமொன்றை மேற்கொள்ள சேர்பிய அமைச்சர்கள் திட்டமிட்டுள்ளார்கள். அவர்கள் அங்குள்ள சேர்பிய சமூகத்தினரைச் சந்திக்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கொசோவோவை பெல்கிரேட் தனது சொந்த நாடாகத் தொடர்ந்தும் கருதுகின்றது என்பதை வெளிப்படுத்துவதற்காகவே சேர்பிய அமைச்சர்கள் இந்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

கொசோவோ குறித்த விவகாரங்களுக்கான சேர்பிய அமைச்சர் ஸ்லோபடான் சமர்ஜிக் இக்குழுவிற்குத் தலைமை வகிப்பார்.

எனினும், கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைகளை நியாயப்படுத்தும் விதத்தில் கருத்துத் தெரிவித்ததற்காக மன்னிப்புக் கோரும் வரை குறிப்பிட்ட அமைச்சருக்கு கொசோவோ விற்குள் நுழைவதற்கான அனுமதி மறுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் கொசோவோவின் எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகள் எரிக்கப்பட்டதை நியாயப்படுத்தி அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

சேர்பியாவில் உள்ள மேற்குலக தூதரகங்கள் தாக்கப்பட்டமையை நியாயப்படுத்திக் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர், பெப்ரவரி 17 இற்குப் பின்னர் உருவாகியுள்ள சகல பிரச்சினைகளுக்கும் அமெரிக்காவே காரணம் எனவும் தெரிவித்திருந்தார்.

கொசோவோவிற்குள் அனுமதிக்கப்படுவதற்கு முதல் மேற் குறிப்பிட்ட கருத்துகளிற்காக மன்னிப்புக் கோருமாறு அமைச்சர் கேட்கப்பட்டுள்ளார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க ரஷ்யாவின் அடுத்த ஜனாதிபதியென கருதப்படும் டிமிட்ரி மெட்வெடெவ் சேர்பியாவிற்கு ஆதரவளிப்பதற்காக அந்த நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

# இந்தோனேஷியாவில் பூகம்பம்




இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவின் மேற்குப் பகுதியை நேற்று வலுமிக்க பூகம்பம் தாக்கியது. நேற்று மதியம் அளவில் இந்தப் பூகம் பம் மேற்குறிப்பிட்ட பிரதேசத்தைத் தாக்கி யது. பூகம்பத்தின் அளவு ரிச்டர் அளவில் 7.3 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது. பூகம்பத்தையடுத்து பசுபிக் காலநிலை மையம் ஆழிப்பேரலை அபாயம் உண்டு என்று உடனடியாக அறிவித்திருந்தது. எனினும், அந்த எச்சரிக்கை பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

இந்தப் பூகம்பம் பொங்களு என்ற நகரில் இருந்து சுமார் முந்நூறு கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டது.

பூகம்பத்தால் ஜகார்த்தாவில் கட்டடங்கள் சிறிதுநேரம் [illegible] உயிர்சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை என்று உள்ளூர் [illegible] கமொன்றுக்கு தெரிவித்தார்.

# கியூபாவின் ஜனாதிபதியாக ரவூல் ஏகமனதாகத் தேர்வு

ஹவானா, பெப்.26

கியூபாவின் புதிய ஜனாதிபதியாக ரவூல் காஸ்ட்ரோவை அந்த நாட்டின் தேசிய சபை நேற்றுமுன்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்துள்ளது.

அவரை நூற்றாண்டு கால ஆட்சிக்குப் பின்னர் கடந்த வாரம் பிடல் காஸ்ட்ரே பதவி விலகி யமையைத் தொடர்ந்தே அவரது சகோதரர் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ரவூல் காஸ்ட்ரோ, முக்கிய விடயங்கள் குறித்து தொடர்ந்தும் கியூப அரசு, பிடல் காஸ்ட்ரோவுடன் கலந்துரையாடுமெனத் தெரிவித்துள்ளார். இதற்கு நாடாளுமன்றம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

பிடல் காஸ்ட்ரோ ஜனாதிபதியாக இல்லாவிட்டாலும் அவரது கருத்துகள் நம்மை வழி நடத்தும் என்றும் ரவூல் கூறினார். கியூபப் புரட்சியை பொறுத்த வரை பிடல் காஸ்ட்ரோ தான் ஒரே தலைவர் எனும் நம்பிக்கையில் புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார் என்றும் அவர் அறிவித்தார்.

"கியூபப் புரட்சியின் தளபதி தனித்துவமானவர். பிடல் பிடலேதான். அவர் மாற்றப்பட முடியாதவர்." - என்றும், ரவூல் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கியூபாவின் துணை ஜனாதிபதியாக 78 வயது மச்சாடோ வென்டுரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்டார் எனக் கருதப்பட்ட கப்பல் உரிமையாளர் பொலிஸில்

கொழும்பு, பெப். 26

கொழும்பு செட்டியார் தெருவுக்கு அருகிலுள்ள கதிரேசன் வீதி விடுதி ஒன்றிலிருந்து நேற்றுப்பிற்பகல் கடத்தப்பட்டார் என்று கூறப்படும் 'ஐரிஷ் மோனா' கப்பலின் உரிமையாளரும் சிங்கப்பூரைச் சேர்ந்தவருமான இளங்கோவன் என்ற தமிழர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான என்.கே. இலங்கக்கோன் தெரிவித்திருக்கிறார்.

கதிரேசன் வீதியில் உள்ள விடுதியில் இருந்து இளங்கோவன் என்ற தமிழர் கடத்தப்பட்டார் என்று கூறப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்த விடயத்தை தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:-

இளங்கோவன் என்ற நபரை பொலிஸ் சீருடை அணிந்து வந்த குழு ஒன்று அழைத்துச் சென்றதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது.

பொலிஸ் சீருடை அணிந்ததாகக் கூறப்பட்டதனால் பொலிஸ் நிலையங்களிடம் தொடர்பு கொண்டு கேட்டோம். இதன் போது குறிப்பிட்ட வர்த்தகர் முகத்துவாரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்புட்டுள்ளார் எனத் தெரியவந்தது. அந்த நபர் கடத்தப்படவில்லை விசாரணைக்காகவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். - என்றார் அவர். (சி)

## பேராதனைப் பல்கலை மாணவர்கள் மோதல்

கொழும்பு, பெப்.26

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மற்றும் கலைப்பீட மாணவர்களுக்கு இடையில் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதலில் 11 மாணவர்கள் காயமடைந்து, பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 9 பேர் பின்னர் வீடு திரும்பினர்.

விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கமே பின்னர் கைகலப்பு வரைச் சென்றதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கைகலப்பை அடுத்து பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது. விடுதிகளில் இருந்து மாணவர்களை நேற்று ஒரு மணியுடன் வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (உ)

## தமிழில் வாக்காளர் பட்டியல் இல்லை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனு

### இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி தாக்கல்

கொழும்பு,பெப்.26

நுவரெலியா மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் தமிழில் தயாரிக்கப்படாமையை ஆட்சேபித்து இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நேற்றுத் தாக்கல் செய்தது.

இந்த அமைப்பின் சார்பில் வலப்பனைப் பகுதியைச் சேர்ந்தவர்களான கணபதி கனகராஜ் உட்பட நால்வர் இந்த மனுவை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறு தமிழில் வாக்காளர் பட்டியல் பேணத்தவறுவது அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமை மற்றும் மொழி உரிமை மீறல் என்று தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், இத்தகைய பட்டியல் தமிழில் இல்லாததால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும், வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனையைக் கூட தங்களால் எழுத முடியாமல் இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக சட்டமா அதிபர்,தேர்தல் ஆணையாளர், நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (சி)

## பிரபாவின் மாவீரர் தின உரை இறுவட்டு வைத்திருந்தவர் கைது

கொழும்பு, பெப். 26

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரை அடங்கிய இறுவட்டுக்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஜா-எலவில் வைத்து ஒருவரை தெமட்டக்கொடை குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மஸ்கெலியா பிரவுண்ஸ் விக் தோட்டத்தைச் சேர்ந்தவரும் கொழும்பு, செட்டியார் தெருவில் வசிப்பவருமான ராமஜெயம் ரவிச்சந்திரன் (வயது - 34) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த 19 ஆம் திகதி ஜா எலவில் உள்ள அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்ற இரகசியப் பொலிஸார் வீட்டைச் சோதனையிட்டவேளை சுமார் 105 சினிமா பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்களை எடுத்துச் சென்றனர் என்றும், அதில் இரண்டு இறுவட்டுக்களில் மாவீரர் தின உரைஇருக்கின்றது என்று கூறியே ரவிச்சந்திரன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

## விளையாட்டாகச் சுட்டு யாலவில் சிப்பாய் பலி

புத்தல, யால காட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

புத்தல, காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் விளையாட்டாக தமக்கிடையே சுட்டுக்கொண்டனர் என்றும்- அப்போது தவறுதலாக வெடிபட்டு சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## கையும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் கந்தளாயில் சடலம்

திருகோணமலை, பெப். 26

திருகோணமலை, கந்தளாயிலுள்ள சூரியபுரப் பகுதியில் நேற்றுக்காலை 8.15 மணியளவில் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

சுமார் 28 முதல் 30 வரையான வயது மதிக்கத்தக்கவரின் இந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கந்தளாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (சி)

## தற்கொலை அங்கிகள் சேருவிலவில் மீட்பு

திருகோணமலை, பெப். 26

திருகோணமலை, சேருவில, கல்லடியிலுள்ள காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து நேற்றுக்காலை தற்கொலை அங்கிகள் உட்பட சில ஆயுதப் பொருள்களைப் படையினர் மீட்டிருக்கின்றனர்.

தற்கொலை அங்கிகள் - 03, ரி -4 ரக வெடிபொருட்கள் - 40, துப்பாக்கி ரவைகள் - நாலாயிரம் மற்றும் பீரங்கி வெற்றுக் குழாய்கள் ஆகியவற்றையே படையினர் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (சி)

## பண்டாரவளையில் வெள்ளை வானில் 2 தமிழர்கள் கடத்தல்

பண்டாரவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வெள்ளை வானில் வந்தவர்களால் இரு தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

பண்டாரவளை நகரசபையில் சேவையாற்றும் - புனித தோமஸ் வீதியைச் சேர்ந்த - இரு பிள்ளைகளின் தந்தையான வேலு சுப்பிரமணியம் (வயது - 27) மற்றும் அதே இடத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தொழில் புரிந்த யாழ்ப்பாணம், காரைநகரைச் சேர்ந்த சடாச்சரன் திருவருள் (வயது - 21) ஆகியோரே இவ்வாறு கடத்திச்செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பண்டாரவளை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

## மஹிந்த - ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]) முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைக்கும் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தம் இருவருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றுக்காக ரணிலுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதையொட்டிய சந்திப்புக்குத் தமக்கு வசதியான ஓரிரு நாள்களை எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் அவரது அலுவலகம், ஜனாதிபதி செயலகத்துக்குத் தெரியப்படுத்தியிருந்ததாகவும் -

அதன் அடிப்படையிலேயே இன்றைய சந்திப்பு உறுதிப்படுத்தப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு, அதையொட்டிய அனைத்துக்கட்சிக் குழுக் கூட்டம் ஆகியவை பற்றியே இந்தச் சந்திப்பில் பிரதானமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-அ)

## அநுராதபுர விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு வருகைதந்துள்ள அமெரிக்க அரசாங்கத்தின் விசேட விசாரணை பணியகத்தைச் சேர்ந்த ஏழு நிபுணர்களும் நேற்று அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று அநுராதபுர தாக்குதலுக்கு புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் பரிசோதிப்பதற்கான அனுமதியைப் பெற்றனர்.

விமான படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. அநுராதபுர விமான படைத்தளத்தின் மீது புலிகள் கடந்த வருடம் ஒக்ரோபர் 22ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதலில் படையினர் ஐவர் பலியானதுடன் 22 பேர் படுகாயமடைந்தனர். அத்துடன் புலிகளின் 22 சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன. (அ)

## ஐக்கிய நாடுகள்சபையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனே அம்மையார் இன்று தமது விஜயத்தை முடித்துக்கொள்வதற்கு முன்னர், கொழும்பில் உள்ள ராஜதந்திரிகள் பலரையும், அரச அதிகாரிகளையும் சிவில்அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளார்.

ஐ.நா. செயலாளரின் விசேட பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆகியோரைச் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார். அவர் சனிக்கிழமை மட்டக்களப்புக்குச்சென்று அங்குள்ள ஐ.நா.சார்பு அமைப்புக்களின் அதிகாரிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார். (அ-1)

### தவறிவிட்டது

இணுவிலுக்கும், தாவடிக்கும் இடையில் தியாகராஜா கைலாயநாதர் என்பவருடைய நோர்வே நாட்டு கடவுச்சீட்டு (Passport - இல. 25100420) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தியாகராஜா, தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் விலாசத்தில் அல்லது 021-4590360 எனும்தொலைபேசிக்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரிஆசிரியர்
திரு. செ. தேவறஞ்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

**முருகேசு செல்லத்துரை**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல நீராவியடி வீரகத்தி விநாயகரை இறைஞ்சுகின்றோம்.

ஐடியல் அக்கடமி,
நீராவியடி, யாழ்நகர் (B)

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

### மரண அறிவித்தல்

**முருகேசு செல்லத்துரை**



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லத்துரை 24.02.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி முருகேசு தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிஜயா தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருச்செல்வம் (சின்னத்தம்பி), காலஞ்சென்ற நித்தியலெட்சுமி ஆகியோரின் சகோதரனும், மனோறஞ்சினி, தேவறஞ்சன் (யாழ் இந்துக் கல்லூரி), ஜெயபாலன் (HOTEL ROLAX), சிவபாலன்(Euroville), இந்திரபாலன் (ஜேர்மனி), குணபாலன் (குணா போட்டோ) ஆகியோரின் [illegible] தந்தையும், கமலேஸ்வரன்(T.S.K, உரும்பிராய்), தனலட்சுமி (பவி), பத்மாவதி (கௌரி), சாரதலீலா (இலங்கை வங்கி 2 ஆம் கிளை), வசந்தி (கொழும்பு), ஜயந்தி ஆகியோரின் மாமனாரும் கஜேந்திரன் (யாழ்ப்பாணம், C.T.B),தர்மினி, கருணைதீபன் (Euroville), பிரியதர்சினி, தாரணி, பவித்திரா, ஹயாணன், பிருந்தாபன், ஸ்ரீலவன், தனஜெயன், தர்சிகன், இளங்கீரன், சாம்பவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2008) செவ்வாய்க் கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

210/1, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி/551590)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


மானிப்பாயில்..........



100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
02.02.2008ற்கு முன்னர் பதிவுகளை மேற்க்கொள்ளவும்

Diploma in Mobile Phone Repairing

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-
UNI
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 [illegible]
(மானிப்பாய் பிரதேச சபைக்கு [illegible])

அறிவொளி
NALLUR
சிங்களம்
E.S.பியதாச
(SINHALA TRAINED, S.L.T.S-1)
புதிய பிரிவு
(B.Ed ஆசிரியர்,அரச சேவை [illegible])
ஆரம்பம்:27.02.08
WED- 5 pm
[illegible]
WED, THU 5 pm


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org